காலை முரசு

பக்கங்கள் 25

## அடுத்த ஆண்டு தேர்தல் வருடம்

### பிரதமரும் கூறுகின்றார்



அடுத்த ஆண்டு (2024) தேர்தல்கள் நடைபெறும் வருட மாகவே இருக்கும் என்று 04

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 கார்த்திகை 03 திங்கட்கிழமை 20.11.2023 அதிர்வு 111




## அதிரடி காட்டியது அவுஸ்திரேலியா!

23

## தினேஷ் - பிரசன்னவுடன் ரணில் இரகசிய சந்திப்பு



கொழும்பு அரசியல் களம் சூடுபிடித்துள்ள நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்த்தனவையும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவையும் இரகசியமாக அழைத்து முக்கிய பேச்சு நடத்தியுள்ளார் என்று தெரியவந்துள்ளது.

கடந்த வாரம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது என்று கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. 04

### யாழில் நீதிமன்றத்தின் உத்தரவில்

# கட்டுக்காவலில் இருந்த சந்தேகநபர் மரணம்; பொலிஸார் மீது சித்திரவதைக் குற்றச்சாட்டு

### வீடியோவும் வெளியீடு; விசாரணைக்கு உத்தரவு

(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

களவு குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தின் உத்தரவில் கட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர் உயிரிழந்தமை தொடர்பில் பொலிஸார் மீது உறவினர்களால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டு தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க யாழ்ப்பாணம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் பொலிஸ் அதிகாரிகள் குழு நியமிக்கப்பட்டுள்ளது. 04



# ‘பட்ஜட்’டை எவரும் தோற்கடிக்கவே முடியாது; எரணியிதின் சதி முயற்சி வெற்றியளிக்காது



### அடித்துக் கூறுகின்றார் அமைச்சர் சுசில்

“ஜனாதிபதியால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 2024ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் எவராலும் தோற்கடிக்க முடியாது.”

- இவ்வாறு அமைச்சரும் நாடாளுமன்றச் சபை முதல்வருமான சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

“வரவு - செலவுத் திட்டத்தைத் தோற்கடிக்க எதிரணியினர் திரைமறைவில் சதி 04

## கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணி இன்று மீண்டும் ஆரம்பம்

(சண்முகம் தவசீலன்)

முல்லைத்தீவு, கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணி ஏற்கனவே திட்டமிட்டபடி இன்று ஆரம்பமாகி தொடர்ச்சியாக இடம்பெறவுள்ளது என்று முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்திய சாலையின் சட்ட வைத்திய நிபுணர் 04






நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில், வடக்கு - கிழக்கு மாகாண சிவில் சமூகக் குழுவின் ஏற்பாட்டில் தமிழ்த் தேசிய கட்சிகளின் தலைவர்கள், முக்கியஸ்தர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள், பிரமுகர்கள் என அழைக்கப்பட்ட ஒரு குழுவினருக்கு என்று 03



# சொகுசு பயணிகள் கப்பல் கொழும்பை வந்தடைந்தது

'செலிப்ரிட்டி எட்ஜ்' என்ற சொகுசு பயணிகள் கப்பல் நேற்றுப் பிற்பகல் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

2 ஆயிரத்து 780 பயணிகளும், 1,273 பணியாளர்களும் இந்தியாவின் கொச்சி துறைமுகத்திலிருந்து இந்தக்கப்பலில் வருகை தந்துள்ளனர்.

இந்த கப்பலில் வருகைந்துள்ள பயணிகள் இலங்கையின் பல பகுதிகளுக்கும் சுற்றுலா மேற்கொள்ளவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இவ்வருடத்தில் 198,253 பேர் புதிதாக வரி செலுத்தப் பதிவு

இந்த ஆண்டில் இதுவரை 198,253 புதிய வரி செலுத்துபவர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

உள்நாட்டு இறைவரித் திணைக் களம், கோபா குழுவிற்கு அழைக்கப்பட்ட போதே இந்த விடயம் வெளிக்கொணரப் பட்டுள்ளது.

அதற்கிணங்க, 18 வயதுக்கும் மேற் பட்ட சுமார் 16 மில்லியன் மக்கள் வரி செலுத்துபவர்களாக உள்ளனர்.

தற்போது சுமார் 13,000 நிறுவ னங்கள் பெறுமதி சேர் வரி செலுத்து




வதற்குப் பதிவு செய்யப்பட்டுள்ளன என வெளிக்கொணரப்பட்டுள்ளது.

அவர்களில் பலரும் வரி ஏய்ப்பு செய்வதால், உள்நாட்டு இறைவரித் திணைக்களம் இதற்கு முன்னர் வருமான நிர்வாக முறையைப் பயன் படுத்தி வரி வசூலை ஒழுங் குபடுத்துவதற்கு தீர்மானித் திருந்தது.

எனினும் அந்த முறை யில் சிக்கல்கள் இருப்பதாக உள்நாட்டு இறைவரித் திணைக்கள அதிகாரிகள் கோப் குழு விடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# இந்தியப் படகுகளின் வருகையை தடுப்பதற்குப் புதிய அணுகுமுறை

வடக்கு கடற்பரப்பில் சட்டவிரோதக் கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடு படும் இந்திய இழுவைப் படகுகளைத் தடுப்பதற்குப் புதிய அணுகுமுறையாக, கடும் நடவடிக்கைகளை எடுக்க மீன் வளத்துறை அமைச்சகம் முடிவு செய் துள்ளது.

இந்த நடவடிக்கை இலங்கை கடற்பரப்பில் அவர்களின் சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கைகளைத் தடுக்கும் என்று தாம் நம்புகிறார் என மீன்பிடி மற்றும் நீரியல் வளத் துறைப் பணிப்பாளர் எஸ்.ஜே.கஹவத்த தெரி வித்துள்ளார்.

தற்போது, கைது செய்யப்பட்டு நீதி மன்றங்களில் முன்னிலைப்படுத்தப் படும் இந்திய கடற்றொழிலாளர்கள், நீதிமன்றங்களால் இரண்டு ஆண்டுகள் இடைநிறுத்தப்பட்ட சிறைத்தண்ட னைக்கு பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

எனினும் புதிய சட்டத்தின்படி, பட குகளின் உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படலாம்.

ஒரு வெளிநாட்டுப் படகு கைப்பற் றப்பட்டால், அந்தக் குறிப்பிட்ட நாட்டின் தூதரகத்தின் மூலம் உரிமையாளருக்கு இலங்கை நீதிமன்றால், மன்றில் முன்னிலையாகுமாறு அறிவித்தல் வழங்கப்படும் என மீன்பிடி மற்றும் நீரியல் வளத் துறை பணிப்பாளர் எஸ்.ஜே.கஹவத்த தெரிவித்துள் ளார்.

இதில் ஒருகட்டமாக இராமேஸ்வரத் தைச் சேர்ந்த கடற்றொழிலாளர் ஒருவர் கடந்த ஏப்ரல் 2 ஆம் திகதி கைது செய் யப்பட்டு எச்சரிக்கையுடன் விடுவிக் கப்பட்டார்.

எனினும் அவர் கடந்த ஒக்டோபர் மாதம் 28 ஆம் திகதியும் கைது செய் யப்பட்டார். இந்த நிலையில், எதிர்வரும் பெப்ரவரி மாதம் 12ஆம் திகதி நீதி மன்றில் முன்னிலையாகுமாறு தேவை யான ஆவணங்களுடன், படகு உரிமை யாளர்களுக்கு வெளிவிவகார அமைச் சின் ஊடாக அழைப்பாணை அனுப்பு மாறு ஊர்காவற்துறை நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன், இரண்டாவது முறையாக கைது செய்யப்பட்டவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சி

## இரகசியம்...

நடத்தப்பட்ட கலந்துரையாடல் பற்றிய சில விவரங்களை – என் மனப்பதிவுகளை – நேற்று சுட்டியமை போல, இன்று இங்கு பதிவு செய்யலாம் என நினைக்கிறேன்.

அது கலந்துரையாடலா என்றால் இல்லை, தமிழ் தேசிய அரசியலின் தகைசார் பிரமுகர்களை அழைத்து, சுமார் இரண்டு மணி நேரம் ஓரிடத்தில் அமர வைத்து, ஒரு பேராசிரியரினதும் மூன்று விமர்சகர்களினதும் உரைகளைச் செவி மடுக்கச் செய்து, அனுப்பினார்கள் என்பதால் ஏற்பாட்டாளர்கள் பெயர் வைத்த மாதிரி அது 'கருத்தாடல்'தான். அது கலந்துரையாடல் அல்ல. இந்த ஆடலில் – ஆட்டத்தில் – நான்கு பேர் வரிசையாக batting செய்ய... வந்திருந்தோர் தமது செவிகள் மூலம் Fielding செய்துவிட்டுப் போனார்கள். அல்லது அப்படி உள்வாங்கிக் கொண்டனர் என பாவனை பண்ணிப் போனார்கள். அவ் வளவுதான்.

நான் நேற்றே கூறியமை மாதிரி 'டான்' தொலைக்காட்சி நிறுவுனர் குகநாதனின் அழைப்பு என்பதால் தமிழ்த் தேசிய அரசியலின் தலைப்பாக் கட்டிய தரப்புகள் பெரும்பாலும் தவறாது பிரசன்னம். பிளவுபட்டு நிற்கும் தமிழ்த் தேசியக் கட்சிகளை ஒரு மேடைக்கு அல்லது ஓர் அரங்குக்கு இழுத்து வந்து கட்டி வைக்கக் கூடிய ஆளுமையுடன் ஒரு பொதுநபர் – நண்பர் – நம் மத்தியில் இருக்கிறார் என்று மகிழலாம். திருப்திப்படலாம். அதற்கு அப்பால் இந்தக் கருத்தாடலினால் அதிக பலன் விளைந்ததாகத் தோன்றவில்லை. சில சமயத்தில் எதிர்காலத்தில் புதிய வாசல் ஒன்றைத் திறப்பதற்கான முன்மாதிரி நகர்வாக இது முகிழலாம்.

எதிர்பார்த்தபடி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் வரவில்லை. வழக்கமாகவே மற்ற தரப்புகளுடன் ஒட்டுவதற்கு, அவை தங்களைப் போல தமிழ்த் தேசியத் தரத்தில் 24 கரட் ஒரிஜினல் அல்ல, கலப்பு மிகுந்தவை என்ற கணிப்பு அக்கட்சியினருக்கு. எனினும் இந்த நிகழ்வின் போது கொழும்பில் இருப்பதால் அதற்கு வரமாட்டோம் என்று அதன் இரு எம்.பிக்கள் சார்பிலும் ஏற்பாட்டாளர்களுக்கு அறிவிக்கப்பட்டதாகத் தகவல்.

இப்படிப் பகிரங்கக் கருத்தாடல்களை வைத்து தமிழ்த் தேசிய கட்சிகளை ஒன்றுபடுத்த முடியாது, அப்படி பகிரங்கத்துக்கு வருவதற்கு முன்னர் பின்னணியில் 'ஹோம் வேர்க்' நிறைய செய்ய வேண்டும் என்பது ஸ்ரீகாந்தா– சிவாஜி இரு நபர் கூட்டின் தரப்பான தமிழ்த் தேசியக் கட்சியின் முடிவு. அதனால் அழைப்புக் கிடைத்தும் அவர்கள் கூட்டத்திற்கு வரவில்லை.

தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் விக்னேஸ்வரனோ, மணிவண்ணன் உட்பட ஏனையோரோ சமுகம் தரவில்லை. ஆசிரியர் அருந்தவபாலன் வந்திருந்தார். ஆனால் அவர் அக்கட்சியில் இன்னும் இருக்கிறார் என்று நான் கருதவில்லை.

விக்னேஸ்வரன் ஐயாவுக்கு அழைப்பு வழங்கப்படவில்லை, அழைப்புக் கொடுத்திருந்தால் அவர் வந்திருப்பார் என்று அவருக்கு நெருக்கமான ஒருவர் உள்வீட்டுத் தகவலைத் தந்தார்.

ஆனால் இந்நிகழ்ச்சிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னரே – கடந்த நான்காம் திகதியே – அவருக்கான அழைப்பு ஏற்பாட்டுத் தரப்பின் முக்கிய இரு பிரமுகர்களால் நேரில் விக்னேஸ்வரனின் இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு ஒப்படைக்கப்பட்டது. விக்னேஸ்வரனின் செயலாளர் பெற்றுக் கொண்டார். "ஐயா பூஜையில் இருக்கிறார். வந்ததும் கொடுக்கப்படும்" – என உறுதி அளிக்கப்பட்டது.

பின்னர் தொலைபேசி மூலமும் விக்னேஸ்வரன் எம்.பிக்கு அழைப்புக் குறித்துத் தகவல் தெரிவிக்கப்பட்டது. இவ்வளவுக்குப் பின்னும் அழைப்புக் கிடைக்கவில்லை என்ற அடிப்படையில் அவர் நிகழ்ச்சிக்கு வராமல் விட்டிருந்தால் பிரச்சினை வேறு எங்கோ என்றுதான் அர்த்தம். இந்தப் பிரச்சினை பொதுவாழ்வுக்கு பொருத்தமற்றது என்ற நிலைப்பாட்டை வலியுறுத்தி, அத்தோடு நிறுத்திக் கொள்கிறேன்.

அன்றைய தினம் ரெலோவின் யாழ். மாவட்ட நிர்வாகிகள் தெரிவுக்குழு கூட்டம் யாழ்ப்பாணத்தில் நடந்திருந்தது. அதற்கு வந்த ரெலோவின் Full fledged தலைமைப் பீடம் இந்தக் கூட்டத்திலும் பிரசண்ட்.

புளொட்டும் முழு அளவில் பிரசன்னம் என்று கூறலாம்.

தமிழரசில் மாவை வந்தார். சுமந்திரன், ஸ்ரீதரன், சி.வி.கே.சிவஞானம், பிரதேச சபைகளின் முன்னாள் தலைவர்கள், முன்னாள் உள்ளூராட்சி உறுப்பினர்கள் என்று உயர்ந்த அளவில் அக்கட்சியினர் வருகை தந்தமை கவனிக்கப்பட வேண்டும்.

வரதராஜப்பெருமாள் அணியில் சுகு (சிறிதரன்) ,மோகன், தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் ஐங்கரநேசன், கிளிநொச்சியிலிருந்து முன்னாள் எம்.பி. சந்திரகுமார், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் மற்றும் பேச்சாளர் என்று தமிழ்த் தேசியத்தின் முக்கிய பிரதிநிதிகள் எல்லோருமே வந்திருந்தனர்.

'இன்றைய நிலையில் தமிழ்த் தேசியக் கட்சிகள் செய்ய வேண்டியது?' என்று கருத்தாடல் அழைப்பு அச்சிடப் பட்டபோதே எனக்கு ஒரு சந் தேகம்.

'செய்ய வேண்டியது யாது?' அல்லது 'செய்ய வேண்டியவை என்ன?' என்று அமைந்திருந்தால் முடிவில் வினாக்குறி வருவது பொருத்தம். ஆனால் 'இன்றைய நிலையில் தமிழ்த் தேசிய கட்சிகள் செய்ய வேண்டியது' என்று குறிப்பிட்டு, அதற்குப் பின்னால் மொட்டையாக ஒரு கேள்விக்குறியும் இட்டிருந்தார்கள்.

அந்தக் கருத்தாடலின் பின்னர் எனக்கும் அந்தக் கேள்விக் குறியே மிஞ்சியது. செய்ய வேண்டியது என்ன, அதை எப்படி செய்யப் போகின்றோம் என்று தெளிவான வழிகாட்டல் ஏதும் கருத்தாடலின் விளைவாகப் பிறந்ததாகத் தெரியவில்லை. குழப்பமே மிஞ்சியது.


கூடிக் கலைந்தோம், ஒற்றுமை – ஒற்றுமை, ஐக்கியம் முக்கியம் என்று பேசினோம். அவ் வளவுதான்.

நிகழ்ச்சிகளை நடத்தியவர்கள் சிவில் சமூகக் குழுவினர். அவர்கள்தான் பிரதான மேசையிலிருந்து நிகழ்வுகளை நடத்துவார்கள், அரசியல் தலைவர்கள் அவையோர் தரப்பில் வரிசையாக ஆச னங்களில் இருந்து, சிவில் சமூகத்தின் கருத்தாடலைக் கேட்பார்கள். இதுதான் கூட்ட ஒழுங்கு.

ஆனால், நிகழ்ச்சி தொடங்கி வரவேற்புரை நடக்கும்போது வந்து சேர்ந்த தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா வயது மூப்புக் காரணமாக சற்றுத் தடுமாறியபடிதான் அங்கு வந்தார். முதல் வரிசையில் ஆசனத்தில் இருக்கும் அழைப்பு அப்போது வரவேற்புரை ஆற்றிக் கொண்டிருந்தவரால் மாவைக்குத் தெரியப்படுத்தப்பட்டது. ஆனால் அதை அவர் செவிமடுத்தாரோ தெரியவில்லை. தம்பாட்டில் மேடையில் – பிரதான மேசையில் – தலைவர் மற்றும் பேச்சாளர்கள் நடுவில், மற்றொரு பேச்சாளருக்காக அவர் வரவை எதிர்பார்த்துப் போடப்பட்டிருந்த ஆசனத்தில் தான் போய் அமர்ந்து கொண்டார் மாவை. அவருக்கு நேரில் விடயத்தைச் சொல்லித் திருத்த முடியாமல் நெளிந்தனர் ஏற்பாட்டாளர்கள். மாறி மாறி கைத்தொலைபேசி அழைப்புகளும் அவர்களுக்குள் பறந்தன. மாமியார் சேலை விலகினால், பார்க்காமல் தலையைக் குனிந்தபடி செல்வது போல, நிகழ்ச்சி முடியும் வரை அவர்கள் அந்தரித்தமையையும் பார்க்கச் சுவையாகத்தான் இருந்தது.

வந்து இருந்து சற்று நேரத்திலாவது பிரதான மேசைக்குத் தான் பொருத்தமானவனும் அல்லன், அதற்கு அழைக்கப்பட்டவனும் அல்லன் என்பதை புரிந்து மாவை பார்வையாளர்களின் முதல் வரிசைக்கு வந்து விடுவார் என எதிர்பார்த்தேன். நடக்கவில்லை. மாறாக, அடுத்துப் பேசத் தன்னை அழைக்க மாட்டார்களா என்று ஏக்கமும் ஆயத்தமும்தான் அவர் உடல் அசைவில் தென்பட்டன.

(04ஆம் பக்கம் பார்க்க)


People's Petition

Northern and Eastern Provinces Civil Society Group

வடக்கு, கிழக்கு மாகாண சிவில் சமூக குழு

கருத்தாடல்

இன்றைய நிலையில் தமிழ் தேசியக் கட்சிகள் செய்யவேண்டியது?

தலைமை:
பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை

கருத்துரைகள்:
அ.யதீந்திரா
நிலாந்தன்
பேராசிரியர் கே.ரி. கணேசலிங்கம்

இடம்:
தந்தை செல்வா கேட்போர்கூடம்
(யாழ். மத்திய கல்லூரி அருகில்)

காலம்:
18 நவம்பர் மாலை 5.00 மணி

தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

வடக்கு, கிழக்கு மாகாண சிவில் சமூக குழு
40 Racca Lane, Jaffna, Sri Lanka
Rsvp: 0772151812 E-mail: nepppcg@gmail.com

# சீனி, கீரி சம்பா அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது

சந்தையில் தற்போது சீனி மற்றும் கீரி சம்பா அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.

சீனிக்கு வரி விதிக்கப்பட்டதன் மூலம் சந்தையில் சீனியின் விலை அதிகரித்த தையடுத்து, அரசாங்கம் சீனிக் கான கட்டுப்பாட்டு விலையை விதித்தது.

எனினும், சந்தையில் போதுமான சீனி கையிருப்பில் இல்லை என நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

எனினும், நாட்டில் சீனி தட்டுப்பாடு ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

நாட்டில் 19,000 மெட்ரிக் தொன் சீனி கையிருப்பில் உள்ளதாக நுகர் வோர் விவகார அதிகார சபை தெரி வித்துள்ளனர்.

இந் த நிலையில், களஞ் சிய சாலைகளில் உள்ள சீனி கையிருப்பில் ஆகக்கூடிய சில்லறை விலையின் கீழ் சந்தைக்கு விநியோகிக்க நடவ டிக்கை எடுக்கப்படுமென நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்ப லாபிட்டிய தெரிவித்துள்ளார்.

அத்துடன், சீனி இறக்குமதியாளர்களுடன் இன்று விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சந்தையில் கீரி சம்பா அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

எவ்வாறாயினும், கீரி சம்பா பற்றாக் குறையை நிவர்த்திப்பதற்கு வெளிநாடுகளில் இருந்து அரிசியை இறக்குமதி செய்யவுள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### தினேஷ்...

ஜனாதிபதி செயலகத்தில் மிகவும் இரகசியமான முறையில் நடைபெற்ற அந்தச் சந்திப்பு அரை மணி நேரத்துக்கும் மேலாகத் தொடர்ந்தது என்று அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால், அவர்கள் மூவரும் என்ன பேசினார்கள் என்ற தகவல் வெளியாக வில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### அடுத்த ஆண்டு...

பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

குறிப்பாக ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் அடுத்த ஆண்டு நடைபெற்றே தீரும் என்றும் அவர் உறுதியளித்தார்.

ஆனால், உள்ளூராட்சி சபைத் தேர்தல் எப்போது நடைபெறும் என்று பிரதமர் குறிப்பிடவில்லை. மாகாண சபைத் தேர்தல் தொடர்பிலும் அவர் வாய் திறக்கவில்லை.

எனினும், 2024ஆம் ஆண்டில் ஜனாதிபதித் தேர்தலும் அதன்பின்னர் நாடாளுமன்றத் தேர்தலும் நடைபெறும் என்று முன்னர் தெரிவித்திருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 2025ஆம் ஆண்டில் மாகாண சபைத் தேர்தல் நடைபெறும் என்றும் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. ஆனால், உள்ளூராட்சி சபைத் தேர்தல் எப்போது நடக்கும் என்று ஜனாதிபதியும் எதுவும் தெரிவித்திருக்க வில்லை.

இதேவேளை, எந்தத் தேர்தல் நடந்தாலும் தீர்மானிக்கும் சக்தியாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன இருக்கும் என்று பிரதமர் தினேஷ் மேலும் கூறினார்.

### கட்டுக்காவலில்...

தமது மகன் சந்தேகத்தின் பேரில் வட்டுக்கோட்டை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு 4 நாள்களுக்கு மேல் தடுத்து வைத்து விசாரணை செய்த பின்னரே நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார் என்று பெற்றோர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

மல்லாகம் நீதிவான் நீதிமன்றின் உத்தரவில் கட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்த சந்தேகநபரே நேற்று உயிரிழந்துள்ளார்.

சித்தங்கேணி, கலைவாணி வீதியைச் சேர்ந்த நாகராசா அலெக்ஸ் (வயது 25) என்பவரே உயிரிழந்துள்ளார். சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனையில் சேர்க்கப்பட்ட பின்னர் சந்தேக நபர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் உள்ளிட்ட இருவர் கடந்த வாரம் திருட்டுச் சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்கள் இருவரும் நான்கு நாள்களாக வட்டுக் கோட்டை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்படவும் இல்லை, விடுவிக்கப்படவும் இல்லை என்பதனால் உறவினர்கள் அச்சமடைந்திருந்தனர்.

இதையடுத்து உயிரிழந்த நபரின் தாயார் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணம் பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடொன்றையும் பதிவு செய்திருந்தார். அதனால் சந்தேகநபர்கள் கடந்த 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டிருந்தனர்.

பொலிஸாரின் ஆட்சேபனையடுத்து சந்தேகநபர்கள் இருவரும் கட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்தனர்.

அதன்பின்னர் இருவரும் யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். சிறைக்காவலரின் காவலுடன் மேற்படி சந்தேகநபர் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இந்நிலையில், சிகிச்சை பயனின்றி அவர் நேற்று உயிரிழந்தார்.

உயிரிழந்தவரின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. உடற்கூற்று பரிசோதனையின் பின்னரே உயிழப்புக்கான காரணம் தெரியவரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வட்டுக்கோட்டை பொலிஸார்தன்னை 3, 4 மணித்தியாலங்களுக்கு மேலாக முகத்தை சொப்பின் பைக்கால் கட்டி வைத்து தாக்கி சித்திரவதை செய்தனர் என்று உயிரிழந்த இளைஞர் மருத்துவமனையில் தெரிவித்த வீடியோ நேற்று அவரின் உறவினர்களால் வெளியிடப்பட்டுள்ளது.

### கொக்குத்தொடுவாய்...

கனகசபாபதி வாசுதேவ தெரிவித்தார்.

அகழ்வுப் பணி தொடர்பாகத் தொடர்பு கொண்டு வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர், "அகழ்வுப் பணி இன்று காலை 8 மணியளவில் ஆரம்பித்து தொடர்ச்சியாக இடம்பெற இருக்கின்றது. புதைகுழிக்குள் நீர் தேங்காதவாறு போடப்பட்டுள்ள கொட்டகை மேலும் 10 அடிக்கு நீட்டப்பட்டுள்ளது.

இம்முறை அகழ்வுப் பணி நடைபெறும் போது ராடர் என்ற கருவியைப் பாதுகாப்பு அனுமதியை பெற்று பரீட்சித்துப் பார்க்க எதிர்பார்த்துள்ளோம். இதன் மூலம் எவ்வளவு தூரத்துக்கு அந்தப் புதைகுழி உள்ளது என அடையாளப்படுத்திக்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

நீதிமன்றத்தின் கூற்றுப்படி 25 இலட்சம் ரூபா வரையிலான நிதி இருக்கின்றது. அந்த நிதி இரண்டு வாரங்களுக்கு அகழ்வுப் பணி மற்றும் ஏனைய பணிகளை மேற்கொள்ளப் போதுமானதாக இருக்கும்." – என்றார்.

### இரகசியம்...

**(03ஆம் பக்கத் தொடர்ச்சி)**

இப்படி எழுதியமைக்கே என் மீது கோபிப்பார்கள். அதனால் நிறுத்திக் கொள்கிறேன். வயதானால் தாமாக ஒதுங்கி விடுவது நல்லது.

ஒட்டுமொத்தத்தில் நடந்தது காத்திரமான கூட்டம். காத்திரமான முயற்சி. தமிழ்த் தேசியத் தலைமைகளின் வருகை மூலமான பிரதிபலிப்பும் வரவேற்கத்தக்கது.

ஆனால் இப்படித் தலைவர்களை அழைத்தும், ஒற்றுமைச் செயற்பாட்டில் முன் நகர்வதற்கு என்ன செய்ய வேண்டும் என்ற தந்திரோபாயம் வகுக்கப்படாததால் பலனற்ற எத்தனமாகவே அது முடிந்து விட்டது என்பதும் உண்மை.

### 'பட்ஜட்'டை...

முயற்சி செய்கின்றனர். இது தொடர்பில் அவர்கள் ஆளும் தரப்பில் உள்ள சிலருடனும் பேச்சு நடத்தியுள்ளனர் என்று தகவல் கிடைத்துள்ளது. எண்ணிக்கையில் குறைவடைந்து காணப்படும் எதிரணியினரின் சதி முயற்சி ஒருபோதும் வெற்றியளிக்காது.

மக்களுக்குச் சலுகைகளை வழங்கும் இந்த வரவு – செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டே தீரும்." – என்றார்.

# விபத்து அதிகரித்த சூழலில் இளைஞர்கள் மிகவும் நிதானத்துடன் செயற்பட வேண்டும்

## ஹரீஸ் எம். பி. தெரிவிப்பு

(அஸ்ஹர் ஆதம்)

விபத்துக்கள் அதிகரித்துள்ள. சூழலில் இளைஞர்கள் மிகவும் நிதானத்துடனும் பொறுப்புடனும் செயல்பட வேண்டும் என்று திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவருமான சட்டத்தரணி எச்.எம். எம். ஹரீஸ் தெரிவித்துள்ளார்.

நிந்தவூர் பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் மருதமுனை பிரதேசத்தை சேர்ந்த இரு இளைஞர்கள் பலியாகியுள்ளனர். இது தொடர்பில் அனுதாபம் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில் –

இளவயதில் ஏற்படும் மரணங்கள் கவலையளிக்கிறது. மரணம் எல்லோருக்கும் பொதுவானது. எதிர்காலம் தொடர்பில் நிறைய எதிர்பார்ப்புகளும், கனவுகளும் நிறைந்தவர்களாக உள்ள நாளைய தலைவர்களான இளைஞர்களின் இப்படியான இளவயது மரணங்கள் மனதால் ஏற்றுக்கொள்ள முடியாமல் இருக்கிறது.



நிந்தவூர் பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் காலமான மருதமுனை பிரதேசத்தை சேர்ந்த சகோதரர் தமீம் முஹம்மட் மிப்ரித் மற்றும் சகோதரர் நிபாய் முஹம்மட் அமர் ஆகியோரின் ஜனாஸா செய்தி மிகவும்கவலையையும் எதிர்கால சந்ததிகள் தொடர்பில் பயத்தை ஏற்படுத்துகிறது.

இவர்களின் இழப்பு சம்பவம் எமது சமூகத்தின் மீதான பொறுப்புக்களை இன்னும் கூட்டுவதாகவே நான்பார்க்கிறேன்.

இளவயதில் இறைவனின் அழைப்பை ஏற்றுக்கொண்ட சகோதரர் தமீம் முஹம்மட் மிப்ரித் மற்றும் சகோதரர் நிபாய் முஹம்மட் அமர் ஆகியோரின் நல்லமல்களையும், அவர்கள் செய்த நற்காரியங்களையும் எல்லாம்வல்ல இறைவன் பொருந்திக் கொண்டு அவர்களுக்கு உயரிய சுவர்க்கத்தை வழங்க அல்லாஹ்வை பிராத்திக்கிறேன்.

சுகாதாரத்துறை சார்ந்த பணிகளில் ஈடுபட்டுவரும் அவர்களின் பெற்றோர்கள் இவர்களின் இழப்பால்அடைந்திருக்கும் துன்பங்களை நீக்கி அவர்களின் மனதில் இறைவன் நிம்மதியை கொடுக்க வேண்டும்என்று பிரார்த்திக்கிறேன். அவர்களின் இழப்பால் துயருற்ற அவர்களின் குடும்பத்தினர், நண்பர்கள்எல்லோருக்கும் எனது ஆறுதல்களை தெரிவித்து கொள்கிறேன்.

விபத்துக்கள் அதிகரித்து வரும் இந்த காலத்தில் நிதானமாக சகல வாகன சாரதிகளும் வாகனத்தை செலுத்தவேண்டும். எதிர்காலம் தொடர்பிலான சிந்தனைகளையும், மனிதர்கள், மனிதாபிமானம் நிறைந்த மனதை எல்லோரும் விசாலப்படுத்திக்கொள்ள வேண்டும்.– என்றார்.



# பிரதான வீதிகளை ஆக்கிரமிக்கும் கட்டாக்காலி மாடுகளால் தொல்லை

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலுள்ள பிரதான வீதிகளில் கட்டாக்காலி மாடுகளின் தொல்லை தினசரி அதிகரித்த நிலையில் காணப்படுகிறது என்று வாகன சாரதிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கட்டாக்காலி மாடுகளின் தொல்லையால் தினசரி வீதி விபத்துக்கள் ஏற்படுவதுடன் சிலர் உயிரிழந்துள்ள சம்பங்களும் உள்ளன. பலர் உபாதைகளுக்குள்ளாகி வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பகலிலும் இரவிலும் கட்டாக்காலி மாடுகளின் தொல்லையால் பலர் பல வழிகளிலும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

பிரதேசங்களிலுள்ள உள்ளூராட்சி சபைகளால் கட்டாக்காலி மாட்டு உரிமையாளர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டும் சில குறிப்பிட்ட காலத்தின் பின்னர் பழைய நிலைமைக்கே அது திரும்புகின்றது.

கட்டாக்காலி மாடுகளை கட்டுப்படுத்துவதற்கான நிதந்தரமான தீர்வொன்றை பெற்றுத்தருமாறு பிரதேச மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை கேட்டுள்ளனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மூடி மறைப்பதில் உறுதி!

தோண்டத் தோண்டப் பூதம் கிளம்புவது போல, ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் தொடர்பான விசாரணைகள் முடக்கப்பட்டமைக்குப் பின்னால் மறைந்து கிடக்கும் மர்மங்கள் மெல்ல மெல்ல வெளிவரத் தொடங்கி உள்ளன.

ஆஸ்திரேலிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் இவ்விடயத்தை ஒட்டிக் கடந்த வாரம் வெளியிட்ட விசேட செய்தித் தொகுப்பு பல அதிர்ச்சிகரமான புதிய தகவல்களை வெளிக்கொணர்ந்திருக்கின்றது.

“இந்த விவகாரத்தில் புலன் விசாரணைகளைக் கையாள்வது தொடர்பில் பல தலையீடுகள், முரண்பாடுகள், தடைகள் வேண்டுமென்றே ஏற்படுத்தப்பட்டன என்று திருச்சபை கூறிவரும் குற்றச்சாட்டு, இந்தச் செய்தித் தொகுப்பின் மூலம் மீண்டும் மேலும் உறுதிப்படுத்தப்படுகின்றது” - என்று இலங்கைக் கத்தோலிக்க திருச்சபையின் செய்தித் தொடர்பாளர் அருட்தந்தை சிறில் காமினி கூறுகின்றமை அவதானிக்கப்பட வேண்டும்.

ரவி செனிவிரத்ன பிரதிப் பொலிஸ் மாஅதிபர். அவர் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் (சி.ஐ.டியின்) தலைவராக இருந்தவர். இந்த விசாரணைகளுக்கு முதலில் பொறுப்பாக இருந்தவர். அவர் தெரிவித்தவை என்று பல அதிரடி தகவல்களை ஆஸ்திரேலியா ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் இப்போது வெளியிட்டிருக்கின்றது.

● இந்தப் புலன்விசாரணையின் போது இராணுவப் புலனாய்வுத்துறை வேண்டுமென்றே தவறான தகவல்களை பொலிஸாருக்கு வழங்கி அவர்களைப் பிழையாக வழிநடத்தியது.

● குண்டுத்தாக்குதல்கள் நடத்தப்பட்டு, ஆறு மாதங்களுக்குப் பிறகு கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்றதும், ரவி செனிவிரத்னவும் அவரது விசாரணை குழுவினரும், இந்தக் குண்டுத் தாக்குதல் விசாரணைப் பொறுப்பில் இருந்து அதிரடியாக நீக்கப்பட்டனர். புதிய அரசு தலைவர் தேர்வாகி, பிரதமர் மற்றும் அமைச்சரவை நியமிக்கப்பட முன்னரே, முதல் வேலையாக இந்த விசாரணைக் குழு அந்தப் பொறுப்பில் இருந்து நீக்கப்பட்டது. தொடர்ந்து வந்த மாதங்களில் மேலும் 22 பொலிஸ் அதிகாரிகள் இந்த விவகாரத்தில் விசாரணைப் பொறுப்பில் இருந்து காரணம் இன்றி வெளியேற்றப்பட்டனர்.

● ரவி செனிவிரத்னவின் கீழ் பணியாற்றிய 700க்கும் மேற்பட்ட குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளுக்கு வெளிநாட்டுப் பயணத் தடையை அந்த அரசாங்கம் உடனடியாக விதித்தது. இது ராஜபக்ஷ ஆட்சியின் கூட்டாளிகளை விசாரிக்கக் கூடிய பொலிஸாரை இலக்கு வைத்து அச்சுறுத்தும் முயற்சியாக அமைந்தது என ரவி செனிவிரத்ன கூறுகிறார் என்றது அந்தச் செய்தித் தொகுப்பு.

இந்த நடவடிக்கையால் பல அதிகாரிகள் இக்குண்டுத் தாக்குதல் விவகாரத்தை விசாரிக்கவே பயந்தனர். சில அதிகாரிகள் அப்பிரிவில் பணிபுரிய அஞ்சித் தாமாகவே இடமாற்றம் கோரினர் என்று தெரிவிக்கப்பட்டது.

● சில புலனாய்வு அதிகாரிகளுக்கு முஸ்லிம் குழுக்கள் உடன் தொடர்புகள் இருந்தமை கண்டு பிடிக்கப்பட்டு, அவற்றைத் துருவ முற்பட்ட விசாரணை அதிகாரிகள் மேலிடத்தால் அதனைச் செய்ய விடாது தடுக்கப்பட்டனர்.

● பயங்கரவாதிகள் குழு ஒன்றுடன் புலனாய்வு அதிகாரி ஒருவர் வைத்திருந்த தொடர்பு அமெரிக்க எவ்.பி.ஐ. அதிகாரிகளினால் விவரமாகக் கண்டறியப்பட்டுள்ளது.

● ஈஸ்டர் குண்டுத் தற்கொலைத் தாக்குதல் நடத்தியோருடன் தொடர்புகளைப் பேணிய பாதுகாப்புத் தரப்புகளை (அதிகாரிகளை) பொலிஸ் புலனாய்வாளர்கள் நெருங்கி விசாரிக்க முற்பட்டபோது, அரசின் தேசியப் புலனாய்வுப் பிரிவினர் அதனைத் தடுத்தனர். அந்த அதிகாரிகள் நாட்டின் பாதுகாப்புத் தொடர்பான புலனாய்வுடன் தொடர்புபட்டவர்கள், ஆகவே அவர்களை விசா ரிக்கக் கூடாது என்று அடம் பிடித்துத் தடுத்தனர்.

● ஈஸ்டர் ஞயிறு தாக்குதலை நடத்தாமல் தடுத்திருக்க கூடிய - அதற்கு முந்திய புலன் விசாரணை ஒன்றைக் கூட, இராணுவப் புலனாய்வாளர்கள் வேண்டுமென்றே குழப்பினர் என டி.ஐ.ஜி. ரவி செனிவிரத்ன கூறினார் என அந்தச் செய்தி அறிக்கை தெரிவித்தது.

- இப்படி ரவி செனிவிரத்னவை மேற்கோள் காட்டி அதிர்ச்சி தரும் பல விவரங்களை அந்தச் செய்தி அறிக்கை வெளிப்படுத்தி நிற்கின்றது.

இத்தகைய உண்மைகள் வெளிவந்து விடக்கூடாது என்பதற்காகத்தான் அடுத்தடுத்து வந்த அரசுத் தலைவர்கள், தொடர்ந்தும் இவ்விடயத்தை இயன் றளவு மூடி மறைப்பதில் உறுதியாக இருக்கின்றார்கள் போலும்.


## வடமாகாண மரநடுகை மாதம்
## கார்த்திகை - 2023

“இயற்கையே எனது இறைவன். எனக்கு இயற்கை புனிதமானது, மரங்கள் என் கோயில்கள், காடுகள் என் தேவாலயங்கள்.”

மிகைல் கோபர்ச்சேவ்
(சோவியத்யூனியனின் முன்னாள் அதிபர்)







# மன்னார் ஓலைத்தொடுவாயில் ஆயர் இல்லத்தின் 1,531 ஏக்கர் காணியைச் சூறையாடும் அட்டூழியம்

(மன்னார் நிருபர்)

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஓலைத்தொடுவாய் கிராம அலுவலர் பிரிவில் உள்ள தண்ணீர் பாலர் குடியிருப்பில் உள்ள – மன்னார் ஆயர் இல்லத்திற்குச் சொந்தமான – சுமார் 1,531 ஏக்கர் காணியை மன்னார் புது குடியிருப்பைச் சேர்ந்த சிலர் அடாத்தாகப் பிடித்து எல்லை அடைத்து வருகின்றனர் என அப்பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக பல இடங்களில் காணி கொள்ளையில் ஈடுபட்டு வரும் 'அமானி' என்பவர் உள்ளடங்கலாக சுமார் 15 பேர் இவ்வாறு காணி கொள்ளையில் ஈடுபட்டு வருகின்றனர் என அக்கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

ஆயர் இல்லத்திற்குச் சொந்தமான இந்தக் காணியை புதுக்குடியிருப்புப் பகுதியைச் சேர்ந்த இந்த நபர்கள் அடாத்தாகப் பிடித்து அக்காணியைத் துப்புரவு செய்து, எல்லையிட்டு, சுற்று வேலி அடைத்து வருகின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக மன்னார் ஆயர் இல்லத்தைச் சேர்ந்த அருட் தந்தையர்கள் சிலர் தாங்கவ்பல தடவை மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த போதும் எந்தவித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை எனத் தெரிவித்துள்ளனர்.

இதனால் கிராம மக்களுக்கும் காணி மோசடியில் ஈடுபட்டு வருகின்றவர்களுக்கும் இடையில் தொடர்ந்தும் தர்க்க நிலை ஏற்பட்டு வருகிறது. இந்தக் காணி மோசடியில் ஈடுபட்டு வருகின்றவர்களின் பின்னணியில் அரசியல்வாதிகள் சிலர் உள்ளனர் எனவும் அக்கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

காணிகள் இவ்வாறு அடாத்தாக பிடிக்கப்பட்டு வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்பனை செய்யப்படும் நடவடிக்கைகள் இடம் பெற்று வருகின்றன. இவ்விடயம் தொடர்பாக கிராம மக்கள் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வரும் வகையில் கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளனர்.

மேலும் இப்பகுதிகளில் உள்ள காடுகள் அழிக்கப்படுகின்றமையினால் மக்களின் வாழ்வாதாரம் மற்றும் கால்நடைகளின் மேய்ச்சல் என்பனவும் பாதிக்கப்படுகின்றன.

எனவே மன்னார் பொலிஸார் துரித விசாரணைகளை மேற்கொண்டு உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என அந்த மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# காட்டு யானையின் தாக்குதலில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழப்பு

(ரஸீன் ரஸ்மின்)



கருவலகஸ்வெவ – தேவநுவர கிராமத்தில் காட்டு யானையின் தாக்குதலில் குடும்பஸ்தர் ஒருவர் வெள்ளிக்கிழமை இரவு உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கருவலகஸ்வெவ, தேவநுவர பகுதியைச் சேர்ந்த 78 வயதுடைய டபிள்யூ. நிக்கோலஸ் பெரேரா எனும் மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்த நபர் வீட்டை விட்டு வெளியே சென்ற போது, காட்டு யானையின் தாக்குதலில் உயிரிழந்துள்ளார் எனவும், அதன் பின்னர் உறவினர்கள் அவரின் சடலத்தை வீட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் கருவலகஸ்வெவ பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டதை அடுத்து, உயிரிழந்த நபரின் வீட்டுக்கு வருகை தந்த பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

அத்துடன், சம்பவ இடத்திற்கு வருகை தந்த திடீர் மரண விசாரனையின் அதிகாரி, மரண விசாரனையை மேற. கொண்ட பின்னர் சடலத்தைப் பிரேத பரிசோதனைக்காக புத்தளம் தள வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இந்த சம்பவம் தொடர்பில் கருவலகஸ்வெவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

புத்தளம் – கருவலகஸ்வெவ உள்ளிட்ட பல கிராமங்களில் இவ்வாறு காட்டு யானைகளால் மக்கள் பெரும் அச்சத்துடன் வாழ்ந்து வருகின்றனர்.

காட்டு யானைகளால் தமது விவசாய நிலங்கள் கடுமையாக பாதிக்கப்படுவதுடன், இடைக்கிடை இவ்வாறு உயிரிழப்புச் சம்பவங்களும் இடம்பெற்று வருகின்றன எனவும் கருவலகஸ்வெவ பகுதியிலுள்ள மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

# பிக்குவின் கத்திக் குத்தில் காயமுற்ற பொலிஸ் கான்ஸ்டபிள் உயிரிழப்பு!

மாத்தறை மாவட்டத்தின் தெனியாய பிரதேசத்தில் பௌத்த பிக்கு ஒருவரின் தாக்குதலுக்கு இலக்காகி வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் கூறப்படு வதாவது:-

தெனியாய பிரதேசத்தில் காதல் விவகாரத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரைக் கத்தியால் குத்திய 18 வயதுடைய பிக்குவைக் கைது செய்த சம்பவமொன்று கடந்த வியாழக்கிழமை பதிவாகியுள்ளது.

காயமடைந்த பொலிஸ் உத்தியோ கத்தர், சந்தேக நபரான பிக்குவின்



சகோதரியுடன் காதல் தொடர்பில் இருந் துள்ளார்.

அந்தப் பெண்ணை சந்திப்பதற்காக அவருடைய வீட்டிற்குச் சென்றுள்ள போது சந்தேக நபரின் அழைப்பின் பிரகாரம் பல்லேகம கங்கொட வீதியில் அமைந்துள்ள சம்போதி முதியோர் இல்லத்திற்கு அருகில் சென்றுள்ளார் என்சவும் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

அங்கு இருவருக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதத்தையடுத்து பிக்கு தாம் மறைத்து வைத்திருந்த கத்தியால் பொலிஸ் உத்தியோகத்தரை குத்தியுள் ளார் எனவும் பொலிஸார் தெரிவித்துள் ளனர்.

காயமடைந்த 37 வயதுடைய கான்ஸ்டபிள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார் எனத் தெனியாய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை அவர்கள் மேற் கொண்டுள்ளனர்.

# உள்ளூராட்சி மன்ற ஊழியர்களுக்கு விரைவில் நியமனங்கள் வழங்கப்படும்

## அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவிப்பு

உள்ளூராட்சி மன்றங்களுக்கு இணைத் துக்கொள்ளப்பட்டுள்ள 8 ஆயிரத்து 400 ஊழியர்களுக்கும் விரைவில் நியம னங்கள் வழங்கப்படும் என விடயத்திற்குப் பொறுப் பான அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித் துள்ளார்.

வரவு – செலவுத் திட்ட ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான ஐந்தாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

180 நாள்களுக்கு மேல் பணிபுரியும் சாதாரண தொழிலாளர்கள் இதன் மூலம் உறுதி செய்யப்படுவார்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார்.



# மோட்டார் சைக்கிளில் வெள்ளத்தை கடக்க முன்றவர் நீரில் சிக்கிச் சாவு

பலத்த மழை காரணமாக ரங்கல பிரதேசத்தில் வெள்ளம் சூழ்ந்த பாலத்தில் மோட்டார் சைக்கிளில் பயணிக்க முற்பட்ட 50 வயதுடைய நபரொருவர் நீரில் சிக்கி அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

தெல்தெனிய டிப்போவில் சாரதியாக கடமையாற்றிய, ரங்கல பிரதேசத்தை சேர்ந்தவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவிக்கின் றனர்.

பணி முடிந்து வீட்டுக்குச் செல்வதற் காக ரங்கல போகஹகும்புர ஓயாவுக்கு வந்த போது பாலம் வெள்ளத்தில்




மூழ்கிய நிலையில் மோட்டார் சைக்கிளில் பாலத்தை கடக்க முற்பட்ட போதே அவர் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளார்.



# ஒரு மாதத்தில் ஐந்தாவது முறை அக்குறணை நகரம் வெள்ளத்தில்

மத்திய மலைநாட்டின் பல பகுதிகளில் தொடர்ந்து பெய்து வரும் கடும் மழை காரணமாக அக்குறணை நகரின் ஊடாகப் பாயும் பிரதான நீரோடையும் துனுவில வீதி ஊடாக செல்லும் வஹகல ஓயாவும் நிரம்பி வழிகின்றன.

இதன் காரணமாக அக்குறணை நகரம் நீரில் மூழ்கியதால், A 09 வீதியின் போக்குவரத்து முற்றாக நிறுத்தப்பட்டுள்ளது.

வெள்ளம் இருந்த போதும் பயணிக்க முற்பட்ட பஸ் மற்றும் லொறிகியன் வெள்ளத்தில் சிக்கின. எனினும் பஸ்ஸில் இருந்த பலர் பத்திரமாக மீட்கப்பட்டனர்.

அக்குறணை நகருக்கு அருகில் உள்ள வீடுகளும் நீரில் மூழ்கியுள்ளன. இந்த வீடுகளில் இருந்த பொருள்கள் அனைத்தும் நீரில் மூழ்கியுள்ளன.

ஒரு மாதத்தில் அக்குறணை நகரில் வெள்ளப்பெருக்கு ஏற்படுவது இது ஐந்தாவது முறை என்பது சுட்டிக்காட்டத்தக்கது.




# மோ. சைக்கிளைத் திருடிய இரு மாணவர்கள் சிக்கினர்

மீகொட, கொம்பயாஹேனேயில் உள்ள வீடொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை திருடிச் சென்றனர் எனக் கூறப்படும் இரு மாணவர்களை தமது பொறுப்பில் எடுத்துள்ளனர் என மீகொட பொலிஸார் தெரிவித்தனர்.

கொம்பயஹேன பிரதேசத்தை வசிப்பிடமாகவும் கொடகம பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்பவர்களுமான 16 மற்றும் 17 வயதுடைய இரு மாணவர்களே பொலிஸ் பொறுப்பில் எடுக்கப்பட்டவர்களாவர்.

மீகொட பொலிஸ் நிலையத்தின் லஞ்ச, ஊழல் ஒழிப்புப் பிரிவின் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட குழுவொன்று கொம்பயஹேன பிரதேசத்தில் விசேட சுற்றிவளைப்புக்குச் சென்றது.

இந்தச சந்தர்ப்பத்தில், சந்தேகத்துக்கிடமான வகையில் இலக்கத் தகடு இன்றி வீதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று வேகமாகச் செல்வதைக் கண்டு, அவர்களைப் பின்தொடர்ந்து சென்று நிறுத்தி விசாரணை மேற்கொண்ட நிலையிலேயே இருவரையும் மோட்டார் சைக்கிளுடன் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர்.



# தெதுரு ஓயா பள்ளத்தாக்கின் பகுதிகளில் வெள்ள அபாயம்

தெதுரு ஓயா பள்ளத்தாக்கின் சில தாழ்நில பகுதிகளுக்கு நீர்ப்பாசனத் திணைக்களம் வெள்ள அபாய எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த எச்சரிக்கை இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணி வரை நடைமுறையில் இருக்கும் என நீர்ப்பாசனத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

மழைவீழ்ச்சியின் காரணமாக தெதுரு ஓயா நீர்த்தேக்கத்தின் நீர் கொள்ளளவு வினாடிக்கு 22,400 கன அடி உயர்ந்துள்ளதால் வெள்ளப் பெருக்கு ஏற்படுவதற்கான வாய்ப்புள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இந்நிலையில், தெதுரு ஓயாவின் நீரியல் நிலையங்களின் ஆற்று நீர் மட்டங்களை ஆய்வு செய்யப்பட்டன.

அந்த ஆய்வுக் குறிப்பின் அடிப்படையில், வாரியபொல, நிக்கவெரட்டிய, மஹவ, கொபேகனே, பிங்கிரிய, பல்லம, சிலாபம் ஆகிய இடங்களில் அமைந்துள்ள தெதுரு ஓயா பள்ளத்தாக்கின் தாழ்வான பகுதிகளில் சிறியளவிலான வெள்ள நிலைமை ஏற்பட வாய்ப்புள்ளதாகக் கூறப்படுகிறது.

எனவே, மேற்படி பிரதேசங்களில் வசிப்பவர்களும், அவ்வழியாக பயணிக்கும் வாகன சாரதிகளும் இது தொடர்பில் அதிக அவதானம் செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மேலும், இது தொடர்பாக போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் பொதுமக்களை கேட்டுக்கொண்டுள்ளது.



# கண்டி-நுவரெலியா பிரதான வீதியில் போக்குவரத்து நேற்றுப் பகல் பாதிப்பு

கண்டி – நுவரெலியா பிரதான வீதியின் அட்டபாகே பகுதியில் நேற்றுப் பகல் போக்குவரத்து தடைப்பட்டது.

வீதிக்குக் குறுக்கே பாரிய மரமொன்று முறிந்து வீழ்ந்துள்ளதை அடுத்தே போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

இதையடுத்து, அந்த வீதியில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டதாகவும் இந்த பகுதியூடாக செல்வோர் மாற்று பாதைகளை பயன்படுத்துமாறு பொலிஸாரால் கோரிக்கை முன்வைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து பெய்துவரும் கடும் மழையுடனான வானிலையே மரம் முறிந்து வீழ்ந்தமைக்கான காரணம் எனவும் கூறப்பட்டது.

இந்தப் பாதையூடாக செல்லும் சாரதிகள் மிகவும் அவதானமாக வாகனங்களை செலுத்துமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

# ஏறாவூர் பிரதேச செயலகத்தில் பதிவாளர் சேவைகள் முடக்கம்

## பிரதமர் தினேஷ் குணவர்த்தவிடம் முன்னாள் அமைச்சர் சுபைர் முறையீடு





(ஆதம்)

ஏறாவூர் நகர் பிரதேச செயலகத்தின் பதிவாளர் பிரிவு சேவைகள் முற்றாக முடங்கியுள்ளன. இது குறித்து

பிரதமரும் பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தனவுக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளார் என்று கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் எம்.எஸ்.சுபைர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு–

இலங்கையில் உள்ள சகல பிரதேசங்களிலும் உள்ள பதிவாளர் பிரிவுகளில் பிறப்பு இறப்பு மற்றும் விவாக சான்றுதழ்களை விரைவாகவும் இணைய வழி ஊடாகவும் வழங்கும் முறைமை ஏற்படுத்தப்பட்டுள்ளன. அந்த சேவை சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இருந்த போதிலும் ஏறாவூர் நகர் பிரதேச செயலகத்தில் சுமார் ஐந்து மாத காலமாக உள்ளூராட்சி மன்றங்களின் இணைய சேவை செயலிழந்துள்ளதால் பதிவாளர் பிரிவு சேவைகள் முற்றாக முடங்கியுள்ளதுன.

இதே பிரச்சினை செங்கலடி பிரதேச செயலகத்திலும் ஏற்பட்டுள்ளது.

இதனால் அந்தப் பகுதி மக்கள் தங்களுக்கு தேவையான பிறப்பு, இறப்பு, விவாகச் சான்றுதழ்களை பெறுக்கொள்வதில் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

அங்கு சேவையைப் பெறுவதற்காக செல்லும் மக்கள் தினமும் ஏமாற்றத்துடனே திரும்பிச் செல்கின்றனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக நாட்டு மக்கள் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்கி வரும் நிலையில் வேலையற்ற இளைஞர்கள் தொழிலுக்காக வெளிநாடு செல்லுகின்ற கின்றனர்.

இந்த நிலையில் தேவையான கடவுச்சீட்டு மற்றும் அடையாள அட்டைகளை பெற்றுக் கொள்வதற்காக பிறப்பு அத்தாட்சி பத்திரங்கள் பெற்றுக்கொள்வதில் காலதாமதம் ஏற்படுவதாகவும் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்கி வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான நிலையில் குறித்த பிரதேச மக்கள் மட்டக்களப்பு கச்சேரிக்கு சென்று தங்களது பதிவு பிரதிகளை எடுக்க வேண்டியதொரு துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இதற்காக அதிகமான பணமும் செலவழித்து வருவதுடன் நீண்ட நேரம் காத்திருந்து குறித்த சேவையைப் பெற்றுக்கொள்ள வேண்டியதொரு நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த விடயமாக மட்டக்களப்பு மாவட்ட அர அதிபர் மற்றும் கிழக்கு மாகாண ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டு சென்ற போதும் இதுவரையில் எவ்வித மான முன்னேற்றகரமான நட வடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வில்லை.

எனவே பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் என்ற வகையில் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவுக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளேன். பிரதேச மக்களின் நலன் கருதி அந்த பிரதேச செயலகங்களில் வழமை போன்று பதிவாளர் பிரிவு இயங்க வேண்டும் என்பதுவே எமது எதிர்பார்ப்பாகும். – என்றார்.





# கல்முனை ஈ பெஸ்ட் பல்கலைக்கழக 17 ஆவது சான்றிதழ் வழங்கும் நிகழ்வு




(எம்.ஏ.ஏ.அக்தார்)

கல்முனை ஈ பெஸ்ட் பல்கலைக் கழகத்தின் 17 ஆவது சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கல்முனை கிரிஸ்டா இல்லத்தில் பணிப்பாளர் பீ .எம் .எம் .ஜௌபர் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம அதிதிகளாக முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் கலாநிதி எம். எல். ஏ. எம் ஹிஸ்புல்லாஹ் மற்றும் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான எஸ்.எம்.எம்.முஷர்ரப் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் கற்கை நெறிகளை பூர்த்தி செய்த நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.









# லண்டன் அமைப்பின் ஏற்பாட்டில் கண்காட்சியும் பரிசளிப்பும்

**(பழுவூரான்)**

லண்டன் விம்பம் அமைப்பின் ஏற்பாட்டில் மலையகம் “200” மலையக மக்களின் “வலியும் வாழ்வும்” எனும் கருப்பொருளை உள்ளடக்கிய சிறுகதை, ஓவியம் மற்றும் கட்டுரைப் பரிசுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு, ஓவியக் கண்காட்சி என்பன சனிக்கிழமை (18) மட்டக்களப்பு வை.எம்.சீ.ஏ மண்டபத்தில் இடம்பெற்றன.

இதன்போது மலையக மக்களின் வாழ்வாதாரத்தை வெளிக் கொணரும் வகையில் பல்வேறு ஓவியங்கள் காட்சிப்படுத் தப்பட்டிருந்தன.





# மாணவர்களுக்குக் கற்றல் உபகரணம்!

**(ஹஸ்பர்)**

திருகோணமலை மாவட்டம், கந் தளாய் வலயத்தில் உள்ள வறுமைக் கோட்டின் கீழ் வாழும் ரஜ எல வித்தி யாலயத்தில் கல்வி கற்கும் சுமார் 60 மாணவர்களுக்கு 7 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான பாடசாலை உபகர ணப் பொதிகள் முஸ்லிம் எயிட் நிறு வனத்தால் வெள்ளிக்கிழமை (17) வழங்கப்பட்டன.

கல்வியை மேம்படுத்தவும் வறுமை நிலை மாணவர்களின் கற்றல் ஊக்கு விப்புக்காகவும் இத் திட்டம் நடை முறைப்படுத்தப்படுகிறது.



பாடசாலை வளாகத்தில் இடம் பெற்ற நிகழ்வில் முஸ்லிம் எயிட் நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் எம்.எம்.முனீர், திட்ட இணைப்பாளர் றமீஸ் தொழில் நுட்ப உத்தியோகத்தர் மற்றும் பாடசாலை அதிபர் என பலரும் கலந்து கொண்டனர்.





# மட்டு பாரதி பாலர் பாடசாலையின் விளையாட்டுப் போட்டி நிகழ்வுகள்!

(பழுவூரான்)

மட்டக்களப்பு பாரதி பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழாகருவேப்பங்கேணி சண்பிளவர் விளையாட்டு மைதானத்தில் சனிக்கிழமை (18) இடம்பெற்றது.

பாலர் பாடசாலையின் ஆசிரியர் விநாயகமூர்த்தி ரஜினி தலைமையில் இடம்பெற்ற இவ் விளையாட்டுப் போட்டியில் பிரதம அதிதியாக கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனும், சிறப்பு அதிதியாக மட்டக்களப்பு கல்வி வலய பாலர் பாடசாலை கல்விப் பணியகத்தின் வெளிக்கள உத்தியோகத்தர் எஸ். பரணிதரனும், கௌரவ அதிதிகளாக தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் இளைஞர் அணி தலைவர் ச. சுரேஷ்குமார் , கிராம அபிவிருத்தி உத்தியோஸ்தர் திருமதி ஜே. யோனெலாமாறி, சன் பிளவர் விளையாட்டு கழகத்தின் தலைவர்கே.அன்ரனிதாஸ், முன்னாள் மாநகரசபை உறுப்பினர் எஸ். காந்தராஜா, ஸ்ரீ கிருஷ்ணர் ஆலய பரிபாலனசபை தலைவர் ஜெ.ஜெயக்குமரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இப்போட்டிகளில் இடம் பெற்ற உடற்பயிற்சிக் கண்காட்சி அனைவரதும் கவனத்தை ஈர்த்தன.





# நிந்தவூர் வைத்தியசாலையில் தகவல் வெளியீட்டுப் பணியகம்!

(நூறுல் /ஹுதா உமர்)

நிந்தவூர் ஆதார வைத்தியசாலையின் தகவல் வெளியீட்டு பணியகம் மற்றும் மனத்துயர் பரிகார மையம், ஆகியனவற்றை அங்குரார்ப்பண நிகழ்வும், ஊடகவியலாளர் சந்திப்பும் சனிக்கிழமை (18) இடம்பெற்றன.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ. எல். எம். றிபாஸ் ஆலோசனை மற்றும் வழிகாட்டலுக்கு அமைவாக, நிந்தவூர் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் எம். பி. ஏ. வாஜித்தால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் நிந்தவூர் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கே. எம். றயீஸ், நிந்தவூர் ஜும்மா பெரிய பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையின் தலைவர் எம். ஏ. எம். றசீன், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் நிர்வாக உத்தியோகத்தர் எம். எஸ். வி. வஜிதா உட்பட சுகாதார துறையினர் பலரும் கலந்து கொண்டனர்.

சுகாதார சேவையை மேம்படுத்தும் வகையில் கிழக்கு மாகாணத்தில் முன்னுதாரணமாக ஏற்படுத்தப்பட்டுள்ள இந்த புதிய பிரிவுகளின் மூலம் வைத்தியசாலையின் செயற்பாடுகளை பொது மக்களுக்கு எடுத்துக் கூறுகின்ற, வைத்தியசாலையின் ஊடாக மக்கள் பெற்றுக் கொள்ளக் கூடிய செயல்பாடுகளை சந்தைப்படுத்துகின்ற நோக்குடன் இந்த தகவல் வெளியிட்டு பணியகம் ஊடகப்பிரிவு மற்றும் மனதுயர் பரிகார மையம் ஆகியன திறந்து வைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சுகாதார கல்விப் போத னைகளை மக்கள் மத்தியில் முன்னெடுக்க முடியும் என்றும தெரிவிக்கப்பட்டுள்ளது.




**உரலார் கேள்வி :- இந்தியாவில் பி.ஜே.பி. கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான சுப்பிரமணியசுவாமி அவர்கள் தனது பேட்டிகளில், பிரதமர் மோடி, தமிழக பி.ஜே.பி. கட்சித் தலைவர் அண்ணாமலை போன்ற அனைவரையும் தன் இஷ்டத்திற்குப் 'பந்தாடுகிறார்'. ஆனாலும் அவரை அக்கட்சியிலிருந்து விலக்காமல் ஏன் இன்னும் வைத்திருக்கிறார்கள் என்பதற்கான காரணமேதும் உங்களுக்குத் தெரியுமா?**

**உலக்கையார் பதில்:-** நஷ்டத்தைவிட இலாபம் அதிகம் வருமானால் அந்த வியாபாரத்தை யாரும் கைவிட மாட்டார்கள்.

சுப்பிரமணிய சுவாமி 'விட்டேத்தியான' தனது கருத்துக்களால் கட்சியைப் பெரிய அளவில் காயப்படுத்துகிறார் என்பது அனைவருக்கும் தெரிகிறது. ஆனாலும், அவரை அக்கட்சி இன்று



வரை வெளியே விடாமல் தனக்குள் வைத்திருக்கிறது என்றால், அவரால் உண்டாகும் நஷ்டத்தை விட ஏதோ பெரியளவிலான இலாபம் கிடைக்கிறது என்பதை ஊகிக்க முடிகிறது.

உலக நாடுகளில் உள்ள இராஜதந்திரிகள் பலர், சுப்பிரமணியசுவாமியினது மாணவர்கள் என்றும்,

அதனால் இவர் மூலம் உலக நாடுகள் பலவற்றில் இருந்து பல உண்மைகள் 'கறக்கப்படுகின்றன' என்றும் சொல்கிறார்கள். அங்ஙனம் இவர் கறந்து கொடுக்கும் உண்மைகள், தேசத்தின் பாதுகாப்பு, பொருளாதாரம் போன்ற பல விடயங்களுக்கு அவசியமாய் இருக்கும் போல. அதனால்தான் இந்தத் துடுக்குக்காரருக்கு இன்னும் விடுப்புக் கொடுக்காமல் கட்சி வைத்திருக்கிறது என்று நினைக்கிறேன்.

ஆயிரம் தான் இலாபம் இருந்தாலும், கட்சிக் கட்டுப்பாட்டைக் கொஞ்சமும் மதியாமல் இயங்கும் ஒரு மனிதரைத் தண்டிக்காமல் விடுவது என்றோ ஒருநாள் அக்கட்சிக்கு ஆபத்தாய் முடியும் என்பது மட்டும் நிச்சயம். இப்படித்தான் எங்களது முன்னாள் முதலமைச்சரின் துடுக்குத்தனங்களையும் சம்பந்தனார் சகித்துச் சகித்துக் கடைசியில் கட்சியையும், ஆதரவாளர்களையும் பிளவுறச் செய்தார்.

**சல்லடையாரின் சலிப்பு:-'வஞ்சனைகள் செய்வாரோடு இணங்க வேணடாம்!'**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

**உரலார் கேள்வி :- இன்றைய இளையோரின் போக்கு வரவர மோசமாகிக் கொண்டிருக்கிறது. இவர்களை எப்படித்தான் திருத்துவது?**

**உலக்கையார் பதில்:-** அவர்களைத் திருத்த வேண்டிய தேவை இல்லை! அவர்களின் பெற்றோர்களைத்தான் நாம் திருத்த முயல வேண்டும். இன்றைய பெற்றோர்கள் பிள்ளைகளுடைய அற, ஒழுக்க, வளர்ச்சி பற்றி சிறிதளவேனும் கவலைப் படுகிறார்கள் இல்லை. அவர்களைப் பொறுத்த வரை பிள்ளைகளுடைய உடலை நன்கு வளர்த்து விட வேண்டும். அதற்கு அடுத்தபடியாக அவர்களுக்கு எந்த வகையிலேனும் பணம் சேர்க்கும் வழியினைக் காட்டிக் கொடுக்க வேண்டும். இந்த இரண்டும்தான் இன்றைய பெற்றோர்கள் இட்டிருக்கும் வாழ்வின் வரம்புகள்.

அதனால்தான் இன்றைய இளையோரின் போக்கு மோசமாகிக் கொண்டிருக்கிறது. முள்ளை விதைத்து விட்டு நெல்லை எதிர்பார்த்தால் அது கிடைக்குமா என்ன? குறுக்கு வழிகளில் சென்று வெற்றிகளைக் காண நினைக்கும் பெற்றோர்களின் பிள்ளைகள் எப்படி நேர் வழியில் செல்லத் துணிவார்கள்?

ஒரு தந்தை பாடசாலையால் வந்த தன் மகனின் பையை வாங்கிப் பார்த்தாராம். அதற்குள் தான் வாங்கிக் கொடுக்காத ஒரு பேனா இருப்பதைக் கண்டு, எப்படி இது உனக்குக் கிடைத்தது என்று மகனை மிரட்டினாராம். பக்கத்து மாணவனிடம் அந்தப் பேனாவைக் களவாடி வந்த அந்த மகன், பதில் சொல்ல முடியாமல் விழிக்க, கோபம் கொண்ட தந்தை அவனைப் போட்டு அடிக்கத் தொடங்கினாராம். பிள்ளை அழுவதைக் கேட்டு ஓடி வந்த

(15ஆம் பக்கம் பார்க்க)

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாயார், "ஏன் பிள்ளையை அடிக்கிறீர்கள்?" என்று கேட்டு மறிக்க, ஆத்திரத்தோடு அத் தந்தை "நான்தான் இவனுக்கு 'ஒப்பிஸில்' இருந்து வாரம் ஏழு பேனாவை எடுத்து வந்து கொடுக்கிறேனே! இவன் ஏன் பக்கத்து மாணவனின் பேனையைக் களவெடுக்க வேண்டும்?" என்றாராம்.

இதுதான் இன்றைய சமூகத்தின் நிலை. அறத்தையும், சத்தியத்தையும் பேண நினைக்காத பெற்றோரின் பிள்ளைகள் எப்படித் தர்மவழியில் நடப்பாரகள்? அதனால்தான் இன்றைய பிள்ளை களின் போக்குக்கு அவர்களைக் குற்றம்சாட்டிப் பயன் இல்லை என்கிறேன். வரம்புக்குள் ஓடி வரும் நீர்தான் வயல்களில் பயிர் வளர்க்க உதவும்.

வரம்பின்றி ஓடி வரும் நீரை, காட்டு வெள்ளம் என்பார்கள். அந்த வெள்ளம் பயிர்களை அழிக்க உதவுமேயன்றி வளர்க்க உதவாது. அறம், ஒழுக்கம் என்ற வரமபுக்குள் நெறிப்படுத்தப்படும் இளை யோரின் ஆற்றல்தான் சமுதாயத்திற்குப் பயன் செய்யும். அவ்விரண்டையும் தவிர்த்து வரும் இளையோரின் ஆற்றல், காட்டு வெள்ளம் போல சமூகத்தை அழிக்கவே உதவும்.

இன்றைய பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு அறப் போதனை செய்வதையும், ஒழுக்க நெறியை உணர்த்துவதையும், தெய்வ நம்பிக்கையை ஊட்டுவதையும் தேவையற்ற வேலைகள் என்று நினைக்கிறார்கள்.

அவர்களுக்கு, பிள்ளைகள் 'டீயூசனுக்கு' மேல் 'டீயூசனுக்குப்' போக வேண்டும். பரீட்சைகளில் நல்ல

'றிசல்ற்' எடுக்கவேண்டும். பின்னர் பெரிய வேலை யில் சேர்ந்து அதிக சம்பளம் பெற வேண்டும் என்பதுதான் நோக்கமாய் இருக்கிறது. பணத்தால் நிம்மதியைப் பெற்றுவிடலாம் எனறு நினைக்கும் இவர் தம் அறியாமையை என்ன சொல்ல?

இவர்களால்தான்இன்றைய இளையோர், மணிவாசகர் சொன்னமை போல, 'சீலம்இன்றி நோன்பின்றி

செறிவே இன்றி அறிவின்றி' வெறும் புற வளர்ச்சியையே தம் வளர்ச்சியாகக் கொண்டு நிமிரப் பார்க்கிறார்கள். அத்திவாரங்கள் சரியாக இல்லாவிட்டால் சிறிய அதிர்வுக்கும் கட்டடம் சரிந்து போகும். விஞ்ஞான வளர்ச்சியின் பெயரால் தீய அதிரவுகள் பல நம் சமூகததுள் அன்றாடம் ஏற்பட்டுவருகின்றன. அதனால் தமது பிள்ளைச் செல்வங்களைக் காக்க வேண்டுமாயின், பிள்ளை களை விடப் பெற்றோர்கள் தான் முதலில் திருந்த வேண்டும்.

**சல்லடையாரின் சலிப்பு :- 'எந்தக் குழந்தை யும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கை யிலே, அவர் நல்லவராவதும் தீயவராவதும் பெற்றோர் வளர்ப்பினிலே'............ ஹீ.... ஹீ.... ஹீ!**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

**உரலார் கேள்வி :- என்ன? சம்பந்தரின் பதவி மாற்றம் பற்றிச் சுமந்திரன் கிளப்பிய அலை 'சப்' என்று அடங்கி விட்டதே! என்ன காரண மாய் இருக்கும்?**

**உலக்கையார் பதில்:-** கிளப்பியது, அடங்கியது ஆகிய இரண்டு செயலகளுமே, வேறெங்கோ இருந்து நூல் பிடித்து ஆட்டுகிறவர்களுடைய வேலையாய் இருக்கலாமோ? என்று நினைக்க வேண்டியிருக்கிறது. சுமந்திரனும் சரி, மற்றவர் களும் சரி வெறுமனே வாயசைக்கும் கதா நாயகர்கள்தான். பின்னணியில் இருந்து குரல் கொடுக்கும் பாடகர்கள், வேறெங்கோ இருக் கிறார்களோ? என்றும் எண்ணத் தோன்றுகிறது

சம்பந்தரை ஓய்வு பெறச் சொன்ன பிறகுதான், அவரின் இடத்திற்கு யாரைப் போடலாம் என்று சுமந்திரன் நினைத்திருப்பார். பிறகு, பதில் தெரியாத காரணத்தினால் மௌனித்திருப்பார். இப்படி எண்ணவும் வாய்ப்பிருக்கிறது.

ஏதாவது அசைவு, ஆட்டம் இருந்தால்தான், கட்சி உயிரோடு இருப்பதை மக்கள் ஒத்துக் கொள்வார்கள் என்பதற்காகவும் இப்படி ஒரு அலை யைக் சுமந்திரன் கிளப்பிவிட்டிருக்கலாம் என்ற ஊகத்தையும் மறுப்பதற்கில்லை.

சம்பந்தரை விலகச் சொல்வதன் மூலம் அவரி டத்திற்கு தான் வருவதற்கான வாய்ப்பை சுமந்திரன் அளக்க நினைத்தாரோ எனன்வோ? அந்த



அளத்தலின் 'றிசல்ற்' பிழைத்ததாலும் அவர் மௌனித்திருக்க வாய்ப்பிருக்கிறது.

சம்பந்தரே கூட தன்னைப்பற்றி மக்கள் என்ன நினைக்கிறார்கள்? என்பதை அளந்தறிவதற் காக சுமந்திரனை வைத்து இப்படி ஓர் அலையைக் கிளப்பிப் பார்த்திருந்தாலும் ஆச்சரியப்படுவதற் கில்லை.

ஊகித்துப் பார்த்தால், உங்கள் கேள்விக்கு இப்படி எத்தனையோ பதில்களைச் சொல்லலாம் போல் தெரிகிறது. என்றோ ஒருநாள் புற்றிற்குள் இருக்கும் பாம்பு வெளிவரப்போவது மட்டும் நிச்சயம்.

**சல்லடையாரின் சலிப்பு :- நாடகமே இந்த உலகம்! ஆடுவதோ பொம்மலாட்டம்!!**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

**உரலார் கேள்வி :- மலையகம் 200 நிகழ் விற்கு மனோ கணேசன் போன்றவர்களை, நேரில் அழைக்காததற்கு ஜீவன் தொண்டமான் சொன்ன காரணம் சரிதானா?**



**உலக்கையார் பதில்:-** சரியான காரணத்தைச் சொன்னாரோ என்னவோ? சரிபோல ஒரு காரணத் தைச் சொல்லி இருக்கிறார். அவ்வளவுதான்!

(16ஆம் பக்கம் பார்க்க)

(15ஆம் பக்கத் தொடர்ச்சி)

சல்லடையாரின்சலிப்பு:-’தொழுத கையுள்ளும் படையொடுங்கும்.’!... ‘கிறேற்’ வள்ளுவர்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

**உரலார் கேள்வி :- யாழ்ப்பாணம் அடுத்த கொண்டாட்டத்திற்கு ஆயத்தமாகிறது போல? ‘யூ டீயூப்பில்’ கலா மாஸ்டரின் ஆடல் தேர்வு பற்றிப் பார்த்தீர்களா? என்ன நினைக்கிறீர்கள்?**



**உலக்கையார் பதில்:-** பல எண்ணங்கள் மனதில் பிறந்தன.

❖ நம் இளையோரிடம் இத்தனை ஆடல் திறமை இருக்கிறதா? என்பது மனதில் பிறந்த முதல் எண்ணம்.

❖ இத்தனை பேர் ஆடப் புறப்பட்டால் நம் இனம் ஆ ப்போய் விடாதா? என்பது மனதில் தோன்றிய மற்றொரு எண்ணம்.

❖ தென் இந்திய சினிமா நோக்கி நமது இளைய தலைமுறை வேகமாக நகர்த்தப்படுகிறதோ? என்பது நினைவை வருத்திய அடுத்த எண்ணம்.

❖ இத்தகைய ஆடம்பர அனுபவங்களை விட்டு விட்டு, அநியாயமாக பலர் மண்ணுக்காய் மாண்டு போனார்களே என்பது மனதைச் சுட்ட மறு எண்ணம்.

❖ ‘ஆமை புகுந்த வீடும், அமீனா புகுந்த வீடும் உருப்படாது’ என்ற பழமொழியை, இனி ஆமை புகுந்த வீடும், சினிமா புகுந்த நாடும் உருப்படாது என்று மாற்றி விட்டால் என்ன? என்பது என் மனம் முன் மொழிந்த ‘குசும்பு’ எண்ணம்.

‘ஈழத் தமிழினத்தை இனிக் கடவுள் தான் காப்பாற்ற வேண்டும்’ என்று, நம் இனத்திற்கான செய்தியைத் தந்தை செல்வா எப்போதே சொல்லி விட்டார்.

சல்லடையாரின் சலிப்பு :- ‘ஆடிக் கொண்டார் அந்த வேடிக்கை காணக் கண் ஆயிரம் வேண்டாமோ?’ .......ச்சும்மா........ச்சும்மா.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# தேசிய நல்லிணக்கத்துக்கான அலுவலக சட்டமூலம் குறித்து நீதியமைச்சர், கல்வியமைச்சரிடம் கலந்துரையாட தீர்மானம்

“தேசிய ஒற்றுமைக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலக சட்டமூலம் தொடர்பில் நீதியமைச்சருடனும்,தேசிய நல்லிணக்கத்தை பாடசாலை மட்டத்தில் அமுல்படுத்துவது தொடர்பில் கல்வி அமைச்சருடனும் கலந்துரையாடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.”

– இவ்வாறு நல்லிணக்கம் மற்றும் தேசிய ஒற்றுமை பற்றிய துறைசார் மேற்பார்வை குழுவின் தலைவர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

நல்லிணக்கம் மற்றும் தேசிய ஒற்றுமை தொடர்பான துறைசார் மேற்பார்வை குழு அதன் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தலைமையில் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் கூடியது.

இந்தக் கூட்டத்தில் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு, சட்டமா அதிபர் திணைக்களம், சட்டவரைஞர் திணைக்களம் மற்றும் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துக்கான அலுவலகம் என்பவற்றின் அதிகாரிகள் மற்றும் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இதன் போது கருத்து தெரிவித்த குழுவின் தலைவர் டிலான் பெரேரா மேலும் தெரிவிக்கையில் –

“கடந்த ஓரிரு மாதங்களாகப் பார்க்கும் போது தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை மீண்டும் பிரயோக ரீதியாக செயல்படுத்துவதற்கு தேவையான விடயங்கள் நாட்டில் ஏற்பட்டுள்ளன. சில அரசியல் தலைவர்கள் மற்றும் மதத்தலைவர்கள் ஏனைய மதத்தை



அல்லது இனத்தைப் புண்படுத்தும் வகையில் நடந்து கொள்கின்றனர். இது தொடர்ந்தும் இடம்பெறுமானால் இந்த நாடு பொருளாதார வங்குரோத்து நிலையில் இருந்து மீள்வதற்கு அரசு எடுக்கும் முயற்சிகள் வெற்றி அளிக்க மாட்டா.

அதனால், இந்தச் சட்டமூலத்தை மேலும் திருத்தம் செய்து, நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து, நிறைவேற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை இந்தக் குழுவின் ஊடாக மேற்கொள்ள எதிர்பார்க்கிறோம். – என்கிறார்.

அத்துடன், தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துக்கான அலுவலகம் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இதற்கமைய, இந்தச் சட்டமூலத்தின் ஊடாக முன்வைக்கப்பட்டுள்ள குறிக்கோளான நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு பற்றிய தேசிய கொள்கையை தயாரிப்பதன் அடிப்படை விடயங்கள் நிறைவடைந்துள்ளன எனவும், அதனை எதிர்வரும் தினங்களில் வெளியிட முடியும் எனவும் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துக்கான அலுவலகத்தின் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.

தேசிய ஒற்றுமையை ஊக்குவிப்பதற்கான சிறந்த தளம் பாடசாலைக் கட்டமைப்பு எனச் சுட்டிக்காட்டிய குழு இந்தச் சட்டத்தில் பாடசாலைக் கட்டமைப்பை சட்டரீதியாக எவ்வாறு இணைத்துக் கொள்ள முடியும் என வினவியது.

கல்வி அமைச்சு மற்றும் தேசிய கல்வி நிறுவகத்துடன் இணைந்து இலங்கையிலுள்ள 67 மும்மொழிப் பாடசாலைகளில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுடன் இணைந்து ஆரம்பக்கட்ட வேலைத்திட்டமொன்றை மேற்கொள்ளத் தயாராகவுள்ளதாக தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துக்கான அலுவலகத்தின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

அத்துடன், இந்தச் சட்டமூலத்தின் ஏற்பாடுகளுக்கமைய தேசிய ஒற்றுமைக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகத்துக்கு தேவையான திருத்தங்களுக்காக அரசாங்கத்துக்குப் பரிந்துரை வழங்க முடியும் என சட்டமா அதிபர் திணைக்களத்தின் அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

அத்துடன் இது தொடர்பில் நீதி அமைச்சர் மற்றும் கல்வி அமைச்சருடன் கலந்துரையாட எதிர்பார்ப்பதாகவும், துறைசார் மேற்பார்வைக் குழுவின் அடுத்த கூட்டங்களில் இளைஞர் பிரதிநிதிகளையும் இணைத்துக்கொள்வதற்கும் குழுவின் தலைவர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.



# கர்நாடக சங்கீத இசை நாடகப் போட்டியில் சேனைக்குடியிருப்பு கணேசா இரண்டாமிடம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அகில இலங்கை கர்நாடக சங்கீத இசை நாடகப் போட்டியில் கல்முனை கல்வி வலயத்துக்கு உட்பட்ட சேனைக் குடியிருப்பு கணேசா மகா வித்தியாலய மாணவர்கள் தேசிய மட்டத்தில் இரண் டாம் இடத்தைப் பெற்றுள்ளனர்.

பாடசாலை அதிபர் .கமலநாதன் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவர்க ளுக்கும் , இப் போட்டியை முன் நின்று நெறிப்படுத்திய சங்கீத பாட ஆசிரியை செல்வி நிலுபாவுக்கும் இப் போட்டியில் மாணவர்கள் பங்கு பெற போட்டிக்கான பாடலைத் தெரிவு செய்து தந்து உதவிய நாடக துறை ஆசிரியை திருமதி.நிழல் வேந்தனுகும் அத்துடன் மாணவர்களை அழைத்துச் செல்வதற்கு வருகை தந்த ஸ்ரீகாந்தன் ஆசிரியருர், நிலக்சனா ஆசிரியை ஆகியோராட்டு யாருக்கு வாழ்த்துக்களைத் தெரிவித் துள்ளார்.






# புத்தளத்தில் இரத்ததானம்!

(ரஸீன் ரஸ்மின்)

மதங்களுக்கு இடையில் நல்லிணக் கத்தை ஏற்படுத்தும் நோக்கில் புத்தளம் நகர மண்டபத்தில் இரத்ததான நிகழ் வொன்று வெள்ளிக்கிழமை (17) இடம் பெற்றது.

இலங்கை தேசிய சமாதானப் பேர வையின் ஏற்பாட்டில் பெண்கள் தலை மைத்துவ அமைப்பின் செயல்படுத்த லூடனும் புத்தளம் நகர சபை, ரம்ய லங்கா, ஆகியவற்றின் பங்குபற்றலூட னும் இந்த இரத்ததான நிகழ்வு நடை பெற்றது.

இந்த இரத்ததான ஆரம்ப நிகழ்வில் புத்தளம் மாவட்ட சர்வமத தலைவர்கள், மகளிர் அமைப்புக்களின் பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

"நாம் தானமளிக்கும் ஒவ்வொரு இரத்தத் துளியும் நல்லிணக்கத்திற்கான உரமாகட்டும்" எனும் தொனிப்பொருளில் இந்த இரத்ததானம் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. இந்த நிகழ்வில் சமயத் தலைவர்கள், படையினர், அரச உத்தி யோகத்தர்கள், பொது மக்கள் என 74 பேர் கலந்து கொண்டு தமது இரத்தத்தை தானம் செய்தனர்.

# நல்லதண்ணி நகரில் பன்றிகள் நடமாட்டம்!

(மஸ்கெலியா நிருபர்)

நல்லதண்ணி நகரில் அதிக காட்டு பன்றிகள் நடமாட்டம் காணப்படுகிறது.

அங்கு உள்ள விருந்தினர் விடுதிக ளும், குடியிருப்பு பகுதியிலும், நகரிலும் இவ்வாறு பன்றிகளின் நடமாட்டம் உள்ளது.

நல்லதண்ணி நகரில் உள்ள வீடுகள், விருந்தினர் விடுதி, வர்த்தக நிலையங்க ளில் உள்ள கழிவு பொருள்களில் உள்ள உணவுகளை உண்ண வருகிறது.

இவ்வாறு வரும் காட்டு பன்றிகள் சில நேரங்களில் விருந்தினர் விடுதி வர்த்தக நிலையங்கள் குடியிருப்புக ளுக்கு உள்ளே சென்று அங்கு உள்ள உணவு பொருள்களையும் உண்ணும் நிலையில் உள்ளது என அப் பகுதியில் உள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.

எதிர் வரும் காலங்களில் சிவனொளி பாதமலை பருவகாலம் ஆரம்பித்தவுடன் இங்கு யாத்திரிகர்கள் வருகை ஆரம் பித்தால் மேலும் பன்றிகள் நடமாட்டம் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.

இதனால் மக்களுக்கு தீங்கு ஏற்படும்



அபாயமும் உள்ளது.

இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரி கள் உடன் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக் கின்றனர் நகர் மக்கள்.


வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 01 - 30, 2023
"ஒரு தேசமாக நிலைத்திருக்க, ஒரு மாநிலமாக வளர,
மக்களாக வாழ எங்களிடம் மரங்கள் இருக்க வேண்டும்."
தியோடர் ரூஸ்வெல்ற் - அமெரிக்காவின் 26ஆவது ஜனாதிபதி
ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்
கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!
தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்


AIRPORT PICKUP & DROP
COLOMBO - JAFFNA
WEDDING SERVICE
DAY RENTING
KDH
VAN FOR RENT
A/C
Make Your Ride Better
CALL NOW
+94 773 776 882
+94 753 770 230

# இன்றைய ராசி பலன்கள் - 20.11.2023




உங்கள் விருப்பங்கள் நிறைவேறு வதற்கு சாதகமான நாள். நீங்கள் எடுக்கும் முடிவுகள் உங்களுக்கு சாதக மான பலன்களை அளிக்கும். நீங்கள் பணிகளை எளிதாக மேற் கொள்வீர்கள்.

பணியிடத்தில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியும் நல்ல புரிந்துணர்வும் காணப்படும். அனுசரணையான மன நிலை மூலம் குடும்பத்தில் நல்லிணக்கம் பராமரிக்கலாம்.

நிதிநிலையில் சில கட்டுப்பாடுகள் காணப்படும். இதனால் வரவு செலவு இரண்டும் காணப்படும். அஜீரணக் கோளாறு பிரச்சினை காணப்படும். உணவில் கவனம் தேவை.




அனுசரணையான அணுகுமுறை மூலம் நீங்கள் இன்றைய நாளை மகிழ்ச் சிகரமாக ஆக்கலாம். இன்று அமை தியாகவும் பொறுமையாகவும் இருக்க வேண்டும்.

மேலதிகாரியுடன் தகவல் தொடர்பில் இருக்கும் பிரச்சினை காரணமாக பணியிடச் சூழல் மகிழ்ச்சிகரமாக இருக்காது. சிறிது அனுசரித்து செல்வதன் மூலம் இந்தச் சூழ்நிலையை நீங்கள் சமாளிக்கலாம்.

குடும்பத்தில் அகந்தைப் போக்கை தவிர்க்க வேண்டும். நெருங்கிய உறவுகளிடம் சண்டை ஏற்படலாம். உங்கள் குழந்தைகளின் வளர்ச்சி குறித்த கவலை காணப்படும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக காணப்படாது. பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளதால் பணத்தை கவனமாகக் கையாளவும்.

மிதமான ஆரோக்கியமே காணப்படும். முதுகு வலி மற்றும் தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது.




உங்களையும் பிறரையும் மகிழ்விக்க சரியான அணுகுமுறையை நீங்கள் மேற்கொள்ள வேண்டும். எது நடக்கிறதோ அதை அப்படியே ஏற்றுக்கொள்ளுங்கள். பிரார்த்தனை மற்றும் வழிபாடு மூலம் அனைத்தும் உங்களுக்கு சாதகமாக அமையும். இன்று பணிகள் அதிகம் இருக்கும் காரணத் தினால் அதிருப்தி நிலவும். உங்கள் மேலதிகாரிகளுடன் அனுசரிக்கும் போக்கில் பிரச்சினை காணப்படும்.

இன்று காதலுக்கு உகந்த நாள் அல்ல. நெருங்கிய உறவுகளிடம் நல்லிணக்கம் குறைந்து காணப்படும்.

நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. பணத்தை பொறுத்தவரை இன்று முக்கிய முடிவுகள் எதையும் எடுக்க வேண்டாம். உங்கள் தாயின் உடல் நலத்திற்காக பணம் செலவு செய்ய நேரும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.




உங்கள் முயற்சிகளில் வெற்றி காண தைரியமாகவும் உறுதியுடனும் செயல் பட வேண்டும்.

கவனமாகப் பணியாற்றுவதன் மூலம் நன்மை பெறலாம். என்றாலும் தவறுகள் ஏற்படாமல் இருக்க எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

உறவு முறை மகிழ்ச்சிகரமாக இருக்காது. உங்கள் உடன் பிறந்தோர் மற்றும் நெருங்கிய உறவுகளிடம் சில பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

நிதிநிலைமை அனுகூலமாக இருக்காது. இன்று எச்சரிக்கையாகவும் விழிப்புணர்வுடனும் இருக்க வேண்டும்.

கால் மற்றும் தொடைகளில் வலி காணப்படும். வயிற்று உப்பசம் ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது.




சில அசௌகரியங்கள் காணப்படும். முயற்சிகள் எடுத்தாலும் அதிருப்தி காணப்படும். முக்கிய முடிவுகள் எடுப்பது வரவேற்கத்தக்கதல்ல.அதனை தவிர்ப்பது நல்லது.

நீங்கள் பணிகளை கவனமாகக் கையாள வேண்டும். பொறுமையை பராமரிக்க வேண்டும். இதனால் வெற்றி அடையலாம். உங்கள் சக பணியாளர்களுடன் மோதல் ஏற்பட வாய்ப்புள்ளது.

குடும்பத்தில் அமைதியும் நல்லிணக்கமும் குறைந்து காணப்படும். அகந்தைப் போக்கை தவிர்க்கவும்.

நிதிநிலைமை மகிழ்ச்சி கரமாக இருக்காது. குடும்பத்திற்காக பணம் செலவு செய்ய நேரும்.

உங்கள் துணையின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. அதற்காக இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.




உங்கள் விருப்பங்களை நிறைவேற்ற நீங்கள் நேர்மையான முயற்சி எடுப் பீர்கள். இது உங்களுக்கு நன்மை பெற்றுத் தரும். என்றாலும் தேவையற்ற கவலைகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

பணிகள் இறுக்கமாக காணப்படும். இன்று பணிகள் அதிகமாக இருப்பதால் நேரத்தோடு பணியை முடிக்க வேண்டும்.

விரும்பத்தகாத தருணங்கள் ஏற்படலாம். இன்று உறவிற்கு உகந்த நாள் அல்ல. உங்கள் அணுகுமுறையில் பொறுமை தேவை.

மிதமான நிதி வளர்ச்சி காணப்படும். நிதி நிலைமையில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.

பதட்டம் காரணமாக தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது. அனுசரணையான அணுகுமுறை நல்லது. தியானம் மேற்கொள்வது சிறந்தது.




மகிழ்ச்சிகரமான நாளாக இருக்காது. விரைந்து முடிவெடுப்பதை தவிர்க்க வும்.இன்று சாதுர்யமாக செயல்பட வேண்டும். அமைதியாக இருக்க வேண் டும்.

இன்று அதிக பணிகள் காணப்படும். பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது.

உங்கள் உறவில் சூடான விவாதங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. உங்கள் துணையுடன் தொடர்பு கொள்ளும் போது அமைதியாக இருத்தல் நல்லது.

நிதி வளர்ச்சி எதிர்பார்க்கும் வகையில் இருக்காது. செலவுகள் அதிகமாக இருக்கும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

பதட்டம் மற்றும் அதிக உழைப்பு காரணமாக உடல் வலி காணப்படும். ஓய்வெடுக்கவும் ஆன்மீக ஈடுபாட்டிற்கும் நேரம் ஒதுக்குங்கள்.




பல சௌகரியங்கள் காணப்படும். இன்று பயனுள்ள முடிவுகளை எடுக்க லாம்.

நீங்கள் மகிழ்ச்சியோடு பணியாற் றுவீர்கள். உங்கள் முயற்சிக்கு தகுந்த அங்கீகாரம் கிடைக்கும்.

உங்களின் உறவுமுறை சிறப்பாக இருக்கும். உங்கள் துணையுடன் இன்றைய நாளை கொண்டாடி மகிழ்வீர்கள்.

நிதி வளர்ச்சிக்கான சாத்தியம் உள்ளது. என்றாலும் உங்கள் செலவுகளை கட்டுப்படுத்த வேண்டும்.

பொதுவாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உணவு முறையில் கவனம் செலுத்த வேண்டும்.

உங்கள் நிதிநிலை திருப்திகரமாக இருக்கும். பணத்தை பயனுள்ள விஷயங்களுக்கு செலவு செய்வீர்கள்.

உங்கள் தன்னம்பிக்கை அதிகரித்து காணப்படும். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 20.11.2023




நீங்கள் வெற்றி காணலாம். ஆனால் இன்று நீங்கள் பொறுமையாக இருக்க வேண்டும். உங்கள் உணர்ச்சிகளை கட்டுப்படுத்த வேண்டியது மிகவும் அவசியம்.

பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது. உங்களின் நேர்மையான முயற்சியில் வெற்றி காண்பீர்கள்.

உங்கள உடன் பிறந்தோர் மற்றும் நெருங்கிய உறவுகளுடன் மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் உறவில் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

நிதி வளர்ச்சி குறைந்து காணப்படும். இன்று செலவுகள் அதிகமாக இருக்கும். இது உங்களுக்கு கவலை அளிக்கும். மிதமான ஆரோக்கியம் காணப்படும். அஜீரணக் கோளாறு ஏற்பட வாய்ப்புள்ளது. இது உங்களுக்கு கவலை அளிக்கும்.




நீங்கள் உங்களை பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் ஈடுபடுத்திக் கொள்வது நல்லது. பணியில் இன்று வளர்ச்சி காணப்படாது. பணியில் கவனம் குறைவாக இருக்கும். பொறுமையுடனும் எச்சரிக்கை யுடனும் பணியாற்ற வேண்டும்.

குடும்பத்தில் நல்ல புரிந்துணர்வு காணப்படாது. நெருங்கிய உறவுகளுடன் விவாதம் அல்லது கருத்து வேறுபாடு காணப்படும்.

செலவுகள் அதிகமாக இருக்கும். அது தேவையற்ற செலவுகளாக இருக்கும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

பதட்டம் மற்றும் பாதுகாப்பின்மை உணர்வு உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும். அமைதியாக இருப்பது சிறந்தது.




ஏற்ற இறக்கங்கள் காணப்படும். ஆன்மீக ஈடுபாடு ஆறுதல் மற்றும் வெற்றியைப் பெற்றுத் தரும்.

உங்கள் பணியில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம். பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது.

மகிழ்ச்சி குறைந்து காணப்படும். அன்பு குறைந்து காணப்படும். இன்று நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

அதிக செலவுகள் காணப்படும். பணத்தை சிறந்த வகையில் செலவு செய்ய வேண்டும்.

உங்கள் பெற்றோரின் உடல் நலனில் கவனம் தேவை. அதற்காக நீங்கள் பணம் செலவு செய்ய நேரலாம்.




திருப்தியும் முன்னேற்றமும் காண திட்டமிட்டு செயல்பட வேண்டும் நம்பிக் கையோடு அணுகுவது உங்களுக்கு நன்மை அளிக்கும்.

பணிகள் இறுக்கமாக காணப்படும். இது உங்களுக்கு வருத்தம் அளிக்கும். வெற்றி கிடைப்பதற்கான வாய்ப்பு அவ்வளவு சிறப்பாக இல்லை.

குழந்தைகளின் வளர்ச்சி கவலை அளிக்கும். உறவில் அகந்தைப் போக்கை கைவிட வேண்டும்.

பண வரவிற்கு உகந்த நாள் அல்ல. பணத்தை இழக்க வாய்ப்புள்ளது. எனவே கவனமாக இருக்க வேண்டும்.

மிதமான ஆரோக்கியம் காணப்படும். கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே கவனமாக இருக்கவும்.

OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA
- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDD OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
KELSEY HOMES 40 Years Housing Experience


S.Thamilan
Group Chairman



CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA

HEAD OFFICE
No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04.
Tel : +94 112 582 582 | Hotline : +94 777 546 546

JAFFNA OFFICE
No. 21/1, Karathivu Road, Navatkuli, Jaffna.
Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539

Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park Npcpark northernpcpark Northern PC Park

# தமிழக மீனவர்களும் இந்திய குடிமக்கள்தான்!

## - மத்திய அரசு மீது இந்திய கொம்யூனிஸ்ட் கட்சி குற்றச்சாட்டு

இலங்கை கைது செய்துள்ள தமிழக மீனவர்கள் இந்திய நாட்டின் குடிமக்கள் தான் என்பதை மத்திய அரசு கருத்தில் கொள்ள வேண்டும் என்று இந்திய கொம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“இராமநாதபுரம் மாவட்டம், பாம்பன் பகுதியைச் சேர்ந்த இரண்டு மீன்பிடி படகுகளில் நாகபட்டினம் கோடியக்கரை பகுதியில் இருந்து தங்கு கடல் மீன் பிடிப்புக்காக கடந்த 15 ஆம் திகதி மீனவர்கள் கடலுக்குள் சென்றுள்ளனர்.

இதில் தங்கச்சிமடம் பகுதியைச் சேர்ந்த 22 மீனவர்கள் கோடியக்கரைக்கும் – பருத்தித் துறைக்கும் இடையில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது, இலங்கை கடற்படையினர் அவர்கள் 22 பேர்களையும் கைது செய்து அழைத்துச் சென்றுள்ளனர்.

கடலில் மீன் பிடிப்பது மட்டுமே வாழ்வாதாரம் என்ற வாழ்க்கை நிலையில் உள்ள கடலோர மீனவக் கிராமங்கள்



அனைத்தும் கடுமையான வேதனையிலும், பாதுகாப்பற்ற பரிதவிப் பிலும் வாழ்ந்து வருகின்றன.

தமிழ்நாட்டு மீனவர்களின் மீன்பிடி உரிமையில் இலங்கை கடற்படையின் அத்துமீறி மறுப்பதை இந்திய ஒன்றிய அரசு தலையிட்டு தடுக்க வேண்டும். மீன்பிடி தொழில் முழுமையாக பாதுகாப்புடன் நடைபெறும் சூழல் உருவாக்கப்பட வேண்டும் என மீனவர்களும், அமைப்புகளும், அரசியல் கட்சிகளும் தொடர்ந்து பா.ஜ.க. ஒன்றிய அரசை வலியுறுத்தி வருகின்றனர்.

தமிழ்நாடு அரசும், முதலமைச்சரும், நாட்டின் பிரதமர், ஒன்றிய அரசின் வெளியுறவுத் துறை அமைச்சர் உள்ளிட்ட அனைவருக்கும் மீனவர் பாதுகாப்புக்கு உரிய ஏற்பாடு செய்ய தொடர்ந்து கடிதம் எழுதி வருகிறார்.

ஆனாலும் இலங்கை அரசுடன் – இந்திய ஒன்றிய அரசு மீனவர்களின் வாழ்வாதாரம் குறித்து திட்டவட்டமான பேச்சு வார்த்தை தொடங்கியதாக தெரியவில்லை. தமிழ்நாட்டு மீனவர்களும் இந்திய நாட்டின் குடிமக்கள் தான் என்பதை மத்திய அரசு கருத்தில் கொள்ள வேண்டும்.

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட மீனவர்கள் அனைவரையும் விடுவித்து, அவர்களது உடைமைகளுடன் நாடு திரும்ப ஏற்பாடு செய்ய வேண்டும். நீண்ட கடற்கரையை பெற்றுள்ள தமிழ்நாட்டின் ஆயிரக்கணக்கான மீனவக் கிராமங்களில் வாழ்ந்து வரும் லட்சக்கணக்கான மீனவர்களின் மீன்பிடி உரிமையை பாதுகாக்க மத்திய அரசு உறுதியான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என இந்தியக் கம்யூ னிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற் குழு நாட்டின் பிரதமர் மோடியை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.” என்று குறிப்பிட்டுள்ளார்.

# பாரதிய ஜனதா கட்சியிலிருந்து விலகி காங்கிரஸில் இணைந்தார் விஜயசாந்தி



நடிகை விஜயசாந்தி பா.ஜ.கவில் இருந்து விலகி, தேசிய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே முன்னிலையில் அந்த கட்சியில் இணைந்துள்ளார்.

தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய தென்னிந்திய மொழிப் படங்களில் நடித்து ‘லேடி சூப்பர் ஸ்டார்’ எனும் அளவுக்கு பெயர் பெற்றவர் நடிகை விஜயசாந்தி .

கடந்த 1998 ஆம் ஆண்டில் அவர் பா.ஜ.கவில் இணைந்தார். திரைப்படத்தில் முன்னணி நடிகையாக வலம் வந்த விஜயசாந்தி, அரசியலிலும் தனக்கென தனி இடத்தை பிடிக்கலாம் என்று நினைத்தார். ஆனால், பா.ஜ.கவில் அவருக்கு முக்கியத்துவம் வழங்கப்படவில்லை என்று அதிருப்தி ஏற்பட்டது.

பின்னர், தல்லி தெலுங்கானா என்ற கட்சியை தொடங்கினார். அதன்பிறகு தனது கட்சியை சந்திரசேகர ராவின் தெலுங்கானா ராஷ்டிர சமிதி கட்சியுடன் இணைத்தார்.

முதல்வர் சந்திரசேகர ராவுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடால், அக்கட்சியில் இருந்து விலகி காங்கிரஸில் அவர் இணைந்தார். கடந்த 2014 ஆம் ஆண்டு தெலுங்கானா சட்டப்பேரவை தேர்தலில் மேதக் தொகுதியில் போட்டியிட்டு தோல்வி அடைந்தார். பின்னர் கடந்த 2020 ஆம் ஆண்டில் அமைச்சர் அமித் ஷா முன்னிலையில் பா.ஜ.கவில் விஜயசாந்தி இணைந்தார்.

தெலுங்கானா சட்டப்பேரவை தேர்தலில் தனக்கு பா.ஜ.க. ஆசனம் வழங்கும் என அவர் பெரிதும் எதிர்பார்த்தார். ஆனால், அவருக்கு ஆசனம் வழங்கப்படவில்லை. இதன் காரணமாக காங்கிரஸ் தேசிய தலைவர் மல்லிகார்ஜுன கார்கே முன்னிலையில் ஹைதராபாத்தில் நேற்று முன்தினம் அவர் காங்கிரஸில் இணைந்தார்.

இது குறித்து விஜயசாந்தி கூறும் போது, “முதல்வர் சந்திரசேகர ராவின் ஊழல் ஆட்சி குறித்து தகுந்த நடவடிக்கை எடுப்போம் என வாக்குறுதி அளித்ததால் பா.ஜ.கவில் இணைந்தேன்.

ஆனால் அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை. தெலுங்கானாவில் காங்கிரஸ் ஆட்சி அமைக்கும். சந்திரசேகர ராவ் ஊழலை அம்பலப்படுத்தி அவரிடம் உள்ள சொத்துகளை பறிமுதல் செய்வோம்” என்று தெரிவித்தார்.

# காசாவில் பாடசாலை மீது இஸ்ரேல் தாக்குதல்: உயிரிழந்தோர் எண்ணிக்கை 80 ஆக அதிகரிப்பு



நோயாளர்கள் உட்பட அதிகமானோர், காசாவின் அல்சிபா வைத்தியசாலையிலிருந்து வெளியேறியுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

வைத்தியசாலையின் அதிகாரிகள் அவர்களை வெளியேறுமாறு பணித்துள்ளனர் என குறிப்பிடப்படுகிறது.

இடிபாடுகள் நிறைந்த தெருக்களில் துப்பாக்கிச் சூடு சத்தம் எழுப்பியபடி பலர் நடந்து செல்வதைக் காண முடிந்ததாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, காசாவில் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள பாடசாலையொன்றின் மீது இஸ்ரேலியப் படைகளால் நடத்தப்பட்ட தாக்குதலில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 80 ஆக உயர்ந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

காசாவின் வடக்கு பகுதியில் ஐக்கிய நாடுகள் சபையினால் நடத்தப்பட்டுவரும் ஜபாலியா ஏதிலிகள் முகாமில் உள்ள பாடசாலையின் மீதே இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், இது தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை தற்போது விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக தெரிவித்துள்ளது.

# மிஸ் யுனிவர்ஸ் பட்டம் வென்றார் நிகரகுவா அழகி!



மிஸ் யுனிவர்ஸ் 2023 பட்டத்தை 23 வயதான ஷெய்னிஸ் பலாசியோஸ் வென்றுள்ளார். இவர் மத்திய அமெரிக்காவில் உள்ள நிகரகுவா நாட்டை சேர்ந்தவர். அந்த நாட்டின் சார்பில் சர்வதேச அளவில் அழகிப் போட்டியில் முதல் முறையாக பட்டம் வென்றவர் என்ற சாதனையை அவர் படைத்துள்ளார்.

72 ஆவது மிஸ் யுனிவர்ஸ் அழகிப் போட்டி எல் சால்வடாரின் சான் சால்வடாரில் உள்ள ஜோஸ் அடோல்போ பினெடா அரங்கில் நடைபெற்றது. இதில் தாய்லாந்து அழகி அன்டோனியோ போர்சில்ட் இரண்டாம் இடத்தையும், ஆஸ்திரேலிய அழகி மொராயா வில்சன் மூன்றாம் இடமாகவும் தேர்வானார்கள்.

இந்த நிகழ்வில் மிஸ் யுனிவர்ஸ் ஆக தேர்வான ஷெய்னிஸ் பலாசியோஸ் /க்கு கடந்த ஆண்டு பட்டம் வென்ற அமெரிக்காவின் ஆர்'போனி கேப்ரியல் முடிசூட்டினார்.

# எலான் மஸ்க்கின் இரண்டாவது முயற்சியும் தோல்வி!



உலக பணக்காரரான எலான் மஸ்க்கின் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம், செவ்வாய் கிரகம் மற்றும் நிலவில் மனிதர்கள் வசிப்பதற்கான சாத்திய கூறுகளை ஆராய்வதற்காக ஸ்டார் ஷிப் விண்கலத்தை உருவாக்கி விண்ணில் ஏவவும் முயற்சியிலுள்ளது.

அந்த நிறுவனம் உருவாக்கியதில் மிகப் பெரிய ராக்கெட்டானஸ்டார் ஷிப் விண்கலம், கடந்த ஏப்ரல் மாதம் ஸ்டார்ஷிப் விண்கலம் சோதனை முயற்சியாக விண்ணில் ஏவப்பட்ட நான்கு நிமிடங்களில் ஸ்டார்ஷிப் வெடித்து சிதறியது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் டெக்சாசில் உள்ள ஏவுதளத்தில் இருந்து ஸ்டார் ஷிப்பின் சோதனை 2 ஆவது முறையாக ஸ்டார்ஷிப் ரொக்கெட் விண்ணில் ஏவப்பட்டது.

ஏவப்பட்ட சிறிது நேரத்தில் பூஸ்டர் வெற்றிகரமாக ஸ்டார் ஷிப்பில் இருந்து பிரிக்கப்பட்டிருப்பினும் பூஸ்டரை தரையிறக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

ஆனால் ஸ்டார்ஷிப்பில் இருந்து பிரிந்த பூஸ்டர் வெடித்து சிதறியுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.




# அதிரடி காட்டியது அவுஸ்திரேலியா!

இந்தியாவில் நேற்று நடைபெற்ற உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் இறுதியாட்டத்தில், அவுஸ்திரேலிய அணி வெற்றிபெற்று உலக சம்பிய னாகியது.

இந்தியாவில் நடைபெற்று வந்த உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் இறுதியாட்டம் நேற்று நடைபெற்றது.

இதில், இந்தியா – அவுஸ்திரலிய அணிகள் மோதின.

இந்தத் தொடரில் இதுவரை எந்த வொரு ஆட்டத்திலும் தோல்வியடை யாத இந்திய அணி சம்பியன் கிண்ணம் வெல்லும் என்ற எதிர்பார்ப்பு மேலோங்கியிருந்தது.

எனினும், அவுஸ்திரேலிய அணி இந்தியாவுக்கு நெருக்குதல் கொடுத்து கிண்ணத்தை அசால்டாகத் தூக்கிச் செல்லும் என்ற எதிர்பார்ப்பும் எழாமல் இல்லை.

இந்த ஆட்டத்தில் முதலில் இந்திய அணி துடுப்பெடுத்தாடியது. அந்த அணி 30 ஓட்டங்களைச் சேர்த்திருந்த போது முதல் விக்கெட்டைப் பறி கொடுத்து அதிர்ச்சியளித்தது.

நான்கு ஓட்டங்களைச் சேர்த்தி ருந்தபோது சுப்மன் ஹில் ஆட்ட மிழந்து சென்றார்.

அவருக்கு அடுத்ததாக வந்த கோஹ்லி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இதற்கிடையில் மறுமுனையில் நின்ற அணித்தலைவர் ரோஹித் சர்மா 47 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அவருக்கு அடுத்து வந்த ஸ்ரேயஸ் ஐயர் 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து சென்றார்.

அப்போது இந்திய அணி 81 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது.

இந்நிலையில், சிறப்பாக ஆடிக் கொண்டிருந்த விராட் கோஹ்லி அரைச்சதம் அடித்த கையோடு, 54 ஓட்டங்கள் சேர்த்திருந்த நிலையில் ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த ரவீந்திர ஜடேயா 9 ஓட்டங்களுடன் பெவிலியன் திரும்பி னார்.

மறுமுனையில் சிறப்பாக ஆடிக் கொண்டிருந்த ராகுல் 66 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் ஆட்டமிழந்தார்.

அவருக்கு அடுத்து மொஹமட் சமி 6 ஓட்டங்களுடன் நடையைக் கட்ட, பும்ரா ஓர் ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார்.

மறுமுனையில் தாக்குப் பிடித்து ஆடிய சூர்யகுமார் யாதவ் 18 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் ஆட்டமிழக்க, அவரைத் தொடர்ந்து யாதவ் 10 ஓட் டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இறுதியில் இந்திய அணி 50 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 240 ஓட்டங்களைச் சேர்த்தது.

மொஹமட் சிராஜ் 9 ஓட்டங்களைச் சேர்த்திருந்தார்.

அவுஸ்திரேலியா சார்பாக பந்து வீச்சில், மிச்சல் ஸ்ராக் 3 விக்கெட்டுக ளையும், ஜோஸ், கம்மின்ஸ் ஆகி யோர் தலா இரு விக்கெட்டுகளையும் சாய்க்க, எஞ்சிய விக்கெட்டுகளை, மக்ஸ்வெல், சம்பா ஆகியோர் தலா ஒன்றுப்படி சாய்த்தனர்.

தொடர்ச்சி 4




# இறுதியாட்ட நாயகன் ட்ரவிஸ் ஹெட்




# தொடரின் நாயகன் விராட் கோஹ்லி

தொடர்ச்சி

## அதிரடி காட்டியது அவுஸ்திரேலியா!

பின்னர், 241 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கிக் களமிறங்கிய அவுஸ்திரேலிய அணிக்கு, ஆரம்பம் பேரதிர்ச்சியாக அமைந்தது,

டேவிட் வோர்னர் (7), மிச்செல் மார்ஷ் (15), ஸ்ரீபன் ஸ்மித் (4) ஆகியோர், அணி 50 ஓட்டங்களைக்கூடத் தொடாத நிலையில் 'பெவிலியன்' திரும்பினர்.

ஒருமுனையில் விக்கெட்டுகள் சரிந்த போதும், மறுமுனையில் நிலைத்து நின்று ஆடிய ஹெட்டுடன், மார்னஸ் ஜோடி சேர்ந்து பொறுமை காத்தார்.

இந்த ஜோடி மெது மெதுவாக நகர்ந்து இறுதியில் வெற்றியிலக்கை நெருங்கிய நிலையில், சதம் கடந்து அதிரடி காட்டிக் கொண்டிருந்த ஹெட் 137 ஓட்டங்களைச் சேர்த்துச் சென்றார்.

இவர் ஆட்டமிழந்தபோது அவுஸ் திரேலியா, 42.5 ஓவர்களில் 239 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது,

மேலும் இரண்டு ஓட்டங்கள் சேர்த் தால் வெற்றி என்ற நிலையில் மக்ஸ்வெல் களத்துள் நுழைந்த வேகத்திலேயே இரு ஓட்டங்களை அடித்து வெற்றியை உறுதிசெய்தார்.

இதன்படி அவுஸ்திரேலிய அணி, 43 ஓவர்களில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 241 ஓட்டங்களைச் சேர்த் ததன் மூலம் 5 விக்கெட்டுகளால் வெற்றி பெற்று, ஆறாவது தடவையாகவும் உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

அந்த அணி சார்பாக நிதானமாக ஆடிய மார்னஸ் 58 ஓட்டங்களுடனும், மக்ஸ்வெல் இரண்டு ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் நின்றனர்.

இந்திய அணி சார்பாக பந்துவீச் சில் பும்ரா 2 விக்கெட்டுகளையும், சமி, சிராஜ் ஆகியோர் தலா ஒரு விக்கெட் டையும் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக அவுஸ்திரேலியா வின் ஹெட் தெரிவானார்.

தொடர் நாயகனாக இந்தியாவின் விராட் கோஹ்லி தெரிவானார்.







# இறுதியாட்டத்திலிருந்து...











